உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 19 வியாழக்கிழமை (03-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:39



# பேச்சுக்கு அனுசரணை வழங்க நோர்வேக்கு பிரபா அழைப்பு!

கொழும்பு,ஜன.3

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கு நோர்வே அரசு தொடர்ந்து அனுசரணை வழங்க வேண்டும் என்று கோரி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நோர்வே பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

புத்தாண்டு தினமான நேற்றுமுன் தினம் அந்தக் கடிதம் நோர்வே அரசுக்கு அனுப்பப்பட்டது.

இது வரை காலமும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்கான அனுசரணை முயற்சியில் நோர்வே அரசு கடைப்பிடித்த பாரபட்சமற்ற நடுநிலைக் கொள்கையையும் பிரபாகரன் தனது கடிதத்தில் பாராட்டியிருந்தார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- "தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் கடந்த இரண்டரை வருட காலமாக நோர்வே அரசு சளைக்காது ஆற்றிய நற்பணிக்கு முதலில் எமது நன்றியையும் மனமார்ந்த பாராட்டு தலையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அனுசரணை வழங்கும் மிகவும் நுட்பமான பணியில் நோர்வே கடைப்பிடித்த பாரபட்ச மற்ற நிலைப்பாட்டையும் மெய்யான நடுநிலையையும் நான் போற்றுகிறேன். இந்த உன்னதமான அணுகுமுறையானது தமிழீழ மக்களிடம் மட்டுமன்றி அனைத்துலகம் வாழ் தமிழர்களிடையேயும் நல்ல வரவேற்பைப் பெற்றது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"தமிழரின் இனச்சிக்கலுக்கு நிரந்தரமான தீர்வும், நிலையான

(12ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் ஏற்பாட்டாளர் குழு நாளை பாலசிங்கத்துடன் பேச்சு!

## லண்டனில் சந்திப்பு

கொழும்பு,ஜனவரி3

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பாட்டாளராகப் பணியாற்றவிருக்கும் நோர்வேயின் விசேட குழு தனது முயற்சியின் முதல் நடவடிக்கையாக நாளை வெள்ளிக்கிழமை லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுகின்றது.**

நோர்வேயின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஜவர் ஹெல்கிஸன் (Ivar Helgeson) தலைமையிலான இந்தக குழுவில் முன்னர் நோர்வேயின் சமாதானத் தூதுவராகக் கடமையாற்றிய எரிக் சொல்ஹெய்ம் (Erik Solheim), நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு அதிகாரி செல்வி கேர்ஸ்ட்டி ரொம்ஸ்டால்(Kjersti Tromsdal) ஆகியோர் அடங்குகின்றனர்.

ஏற்பாட்டாளர் பணியில் தொடர்ந்து ஈடுபடுமாறு நோர்வேக்கு உத்தியோக பூர்வ அழைப்பு விடுக்கும் கடிதத்தை புத்தாண்டுத் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசு விசேட நடவடிக்கை

### அமைச்சர் கரு ஜெயசூரிய கூறுகிறார்

கொழும்பு,ஜன.3

யாழ்குடாநாட்டில் தற்போது நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசு பல விசேட நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய.

வடபகுதிக்கு வழமையான எரிபொருள்ள ஏற்றிச்செல்லும் கப்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது எனவும் -

அதனை நிவர்த்தி செய்ய மேலதிக கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும் -

வடபகுதியில் களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகவும் - அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் சொன்னார்.

(ம-4-ரி)

## கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களையும் வன்னிக்குத் தாராளமாக அனுப்ப வேண்டும்

### ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு,ஜன.3

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எடுத்துச்செல்ல முடியும் என்று அரசு கட்டுப்பாடு விதித்துள்ள பொருள்களில் சில பொது மக்களுக்கு மிக அவசியம் தேவையானவை. எனவே அவற்றைத் தாராளமாக வன்னிக்கு அனுப்பிவைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கோரியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி.

நேற்றிரவு பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இக்கோரிக்கையைத் தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல் முடிந்து அரசு மாறியதும் மக்கள் பல எதிர்பார்ப்புக்களுடனும் மிகவும் ஆர்வத்துடனும் இருந்தார்கள். தேர்தல் முடிவடைந்து சுமார் ஒரு மாத காலத்தின் பின்னர்தான் பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பான அறிவிப்பை அரசு விடுத்திருக்கிறது.

எதிர்வரும் 15ஆம் திகதியே இந்தப் பொருளாதாரத் தடைநீக்கப்படும் எனவும் -

அதிலும் சில வகையான பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுப்பப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு இவ்வளவு நாள் தாமதிக்கவேண்டிய அவசியமில்லை. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் எத்தனையோ உயிர்கள் போய்விடும்.

அத்துடன் சிமெந்து, எரிபொருள் போன்ற பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதுவும் தேவையற்றது. வன்னியிலுள்ள மக்கள் ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபா வரையில் விலை கொடுத்தே சிமெந்து வாங்குகின்றனர். இந்த நிலையிலும் சிமெந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுப்பப்பட்டால் ஒரு சில வியாபாரிகளே அதன் மூலம் பெருமளவான பணத்தைச் சம்பாதிப்பார்கள்.

எனவே இந்தப் பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளும் நீக்கப்படவேண்டும்.

அத்தியாவசியப் பொருள்கள் நாட்டின் ஏனைய இடங்களில் கிடைப்பதுபோல குறைந்த விலையில் இலகு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதிச் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்கள் சிலரின் வழக்குகள் வடக்குக்கு மாற்றம்

கொழும்பு,ஜன.3

தென்பகுதிச் சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் சிலரின் வழக்குகள் வடபகுதியில் உள்ள மேல் நீதிமன்றங்களுக்கு மாற்றப்படவுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கொழும்பு, களுத்துறைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரத் தடை 15ஆம் திகதி நீக்கம்! ஆனால்......

# டீஸல், பெற்றோல், சிமெந்து, கம்பிகள் வன்னிக்கு அனுப்புவதற்குக் கட்டுப்பாடு

### பென்ரோச் பற்றரி உட்பட 6 பொருள்களுக்கு அனுமதி இல்லை

கொழும்பு,ஜன.3

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கான பொருளாதாரத் தடை எதிர்வரும் 15ஆம் திகதி முதல நீக்கப்பட இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஆனால் 6 வகைப் பொருள்கள் மீதான தடை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். மேலும் நான்கு பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படும் என்றும அது அறிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரமற்ற ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிபொருள்கள், தொலை இயக்கி (ரிமோட் கொன்ட்ரோல்)கருவிகள், முள்கம்பி, தொலை நோக்கிக் கருவிகள், பென்ரோச் பற்றறிகள் என்பவற்றுக்கே முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

டீஸல், பெற்றோல், சிமெந்து, இரும்புக் கம்பிகள் ஆகியன கட்டுப்பாடுகளுக்கும் பங்கீடுகளுக்கும் உட்படுத்தப்படும்.

இந்தப் பத்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் மீதான தடை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் முற்றாகத் தளர்த்தப்படும்.

பொருளாதாரத் தடைத் தளர்வு சுமுகமாக நடைமுறைப்படுத்தப்படு

(12ஆம் பக்கம் பார்க்க)

மடவளை இளைஞர்கள் கொலை:

# மேலும் அதிர்ச்சித் தகவல்களை ஜீப் சாரதி ஒருவர் வெளியிட்டார்!

கொழும்பு,ஜன.3

கண்டி உடதலவின்னையில் மடவளையைச் சேர்ந்த பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக புதிய அதிர்ச்சித் தகவல்களை இராணுவ ஜீப் சாரதி ஒருவர் வெளியிட்டுள்ளார்.

பொலீஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்திலேயே இத்தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் இளைஞர்கள் சென்ற வேளை நாம் இரண்டு ஜீப் வண்டிகளில் விரட்டிச் சென்றோம். அந்த வான உடதலவின்னையில் மின்கம்பம் ஒன்றில் மோதி நின்றுவிட்டது. முன்னால் சென்ற ஜீப் வண்டியிலிருந்தோர் கீழே குதித்து வானைச் சூழ்ந்து சுடத்தொடங்கினர். நான் செலுத்திச் சென்ற ஜீப் வண்டியிலிருந்த இராணுவத்தினரும் கீழே குதித்து சுட்டனர். வானில் இருந்த இளைஞர்கள் மரணஓலமிட்டனர்"

- என்று அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதற்கிடையே, இக்கொலைகள் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் தேடப்படும் முன்னாள் அமைச்சர் ரத்வத்தையின் இரண்டு புதல்வர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

(ம)

# நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பட்டதாரிகளின் விவரங்கள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.கல்வி வலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 223பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி ஆள்சேர்ப்புக்காக யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தோரில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரங்களை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் இன்று முதல் பார்வையிடலாம்.

இதேவேளை -

மேற்படி ஆசிரியர் நியமனம் குறித்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயிரம் பட்டதாரிகளை பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களில் இருந்தும் இரண்டாயிரத்து 956 பட்டதாரிகள் இந்த ஆள்சேர்ப்புக்கு விண்ணபித்துள்ளனர். யாழ்.மாவட்டத்தில் இருந்து மட்டும் ஆயிரத்து 223பேர் விண்ணப்பித்துள்ளனர் - என்று உள்ளது.

(ம-7-10-51)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
முன்னாள் பகுதி நேர விரிவுரையாளா

### ஆறுமுகம் மகாதேவன்

அவர்கள் நேற்று காலமானதையிட்டு மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

பீடாதிபதி, உப பீடாதிபதிகள்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(C/19090)



## இதய அஞ்சலி



இரசாயனவியல் வித்தகர், கடமைவீரர்

### ஆறுமுகம் மகாதேவன்

(B.Sc., Dip in Ed., S.L.E.A.S.)

பலாலி ஆசிரிய கலாசாலையின் மூத்த விரிவுரையாளரும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களது கலங்கரை விளககாகவும் திகழ்ந்த எமது அருமைச் சகோதரரின் பிரிவு குறித்து நெஞ்சம் நெகிழ்ந்து வேதனைப்படுகிறோம். அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*விரிவுரையாள சகோதரர்கள்:*
திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி,
திருமதி க. மகேந்திரன்,
திரு. த. காங்கேசபிள்ளை,
திரு. இ. மருதலிங்கம்,
செல்வி ப. நாகரத்தினம்.

(96614)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவன
பிரபல இரசாயனவியல் ஆசிரியர்

### ஆ.மகாதேவன்

அவர்கள் காலமானதையிட்டு
துயர் அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

நியூ. சயன்ஸ் கோல் சமூகம்
கன்னாதிட்டி.

(96614)


நாரந்தனை தாக்குதல் சம்பவம்:

# குடாநாட்டிலிருந்து வெறியேறியோர் விவரங்களைப் பரிசீலிக்க உத்தரவு!

## நெப்போலியன், மதனராஜன் வெளியேறிவிட்டனரா என்பதை அறிய

யாழ்ப்பாணம்,ஜன.3

கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாரந்தனையில் பிரசாரத்துக்குச் சென்றவேளை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினர்மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் நெப்போலியன் மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் நமதன்ராஜன் ஆகிய இருவரும் குடாநாட்டை விட்டு வெளியேறிவிட்டனரா என்பதைக் கண்டறியும் பொருட்டு, நவம்பர் மாதம் 26ஆம் திகதியில் இருந்து நேற்றுவரை விமானம் மூலமும் கப்பல் மூலமும் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் சென்றவர்களின் பெயர் விவரங்களை பரிசீலனை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா பலாலி இராணுவத் தளபதிக்கும் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரிக்கும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் மேற்படி வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஊர்காவற்றுறை பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள இருவரும் இல்லை என்று ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.

அந்தப் பகுதி கிராம சேவகர்களிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவு தமது கட்டுப்பாட்டில் இல்லை எனவும், அது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து இரு சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறும், காரைநகர் கடற்படை அதிகாரிக்கு பகிரங்க பிடியாணை அனுப்புமாறும் கட்டளையிட்ட நீதிவான், அவர்கள் அங்கு மறைந்திருந்தால் உடனடியாகக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராகப் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் குடாநாட்டை விட்டு விமானம் மூலமோ, கப்பல் மூலமோ வெளியேற அனுமதிக்கவேண்டாம் என்று பலாலி இராணுவத் தளபதிக்கும் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரிக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை குடாநாட்டை விட்டு வெளியேறியவர்களின் பெயர் விவரங்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அவர் கட்டளையிட்டார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூன்றாவது சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-6)

# மண்ணெண்ணெய் வாங்குவதற்கு சென்றவர் தாக்கப்பட்டு காயம்

## எரிபொருள் நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.3

எரிபொருள் நிலையம் ஒன்றில் மண்ணெண்ணெய் வாங்கச் சென்றவரை அங்கு கடமையில் இருந்த ஊழியர் ஒருவர் தாக்கியுள்ளார். இதனையடுத்து அவர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவரும் காயமடைந்தனர்.

கல்வியங்காடு பொதுச்சந்தைக்கு அருகில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் நடைபெற்றது.

முகவர் நிலையங்கள் ஊடாகப் பொதுமக்களுக்கு மண்எண்ணெய் வழங்கப்படும் என்ற அறிவிப்பை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் அங்கு கூடியிருந்த சமயம் உரிமையாளர் எரிபொருள் நிலையததை மூடி ஆள்களை வெறியேற்ற முயன்றார் என்றும் -

அப்போது தனக்கு மண்எண்ணெய் வழங்குமாறு கேட்ட ஒருவரே தாக்கப்பட்டார் என்றும் -

கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கானவர் தன்னைத் தாக்கிய எரிபொருள் நிலையப் பணியாளரைத் திருப்பித் தாக்கினார். இதனால் இருவரும் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு முறையிடப்பட்டது.

காத்துநின்ற பொதுமக்கள் சகலருக்கும் மண்ணெண்ணெய் விநியோகிக்குமாறும், அதற்காக இரவு 7.30 மணிவரை நிலையத்தைத் திறந்துவைக்குமாறும் அந்த எரிபொருள் விற்பனை முகவரை அமைச்சர் பணித்தார். அதனையடுத்து அன்றிரவு 8.00 மணிவரை அங்கு மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

(ஜ-180)

## கோஷ்டி மோதலில் ஐவருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம்,ஜன.3

கோண்டாவில் ஸ்ரேசனுக்கு முனபாக உள்ள களஞ்சியத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஐவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானனர். அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.றோட்டைச் சேர்ந்த ஆர்.பிரபாகரன் (வயது 26), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.சிவகுமார் (வயது 34), ஸ்ரேசன் அருகில் கோண்டாவிலைச் சேர்ந்த முருகன் சண்முகம் (வயது 52), கஸ்தூரியா வீதி கன்னாதிட்டிச் சந்தியைச் சேர்ந்த எஸ்.காந்தன் (வயது 22), கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த பி.அப்புலிங்கம் (வயது 39) ஆகியோரே காயங்களுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரப் பகுதியில் இருந்து சென்ற ஒரு குழுவினருக்கும் அப்பகுதியைச் சேர்ந்த சிலருக்கும் இடையே இடம்பெற்ற மோதலிலேயே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-6-9)


கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl)
A/L 2003
** தொடங்கல் **
Sat., Sun.
பிரிவு I : 7 - 8 a.m.
பிரிவு II : 11 - 12 Noon
ஆரம்பம:- 05.01.2002 Sat.
கல்வி நிறுவனம்
(96589)



## கண்ணீர் அஞ்சலி



அமரர் செல்லப்பா
இராசையா கதிரவேற்பிள்ளை
(பெரியகடுக்கன் - லொறி உரிமையாளர்)

01.01.2002 அன்று கடைாவில் சிவபதமடைந்த அமரர் செல்லப்பா இராசையா கதிரவேற்பிள்ளை அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*489, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*
(96610)
S.R.பஞ்சாட்சரம் குடும்பம்
(சின்னக் கடுக்கன்)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

கீன் கல்வி நிலைய நிர்வாகி
திரு. த.குமாரதாசன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தம்பிஐயா செல்லம்மா

அவர்கள் 03.12.2001 திங்கட்கிழமை கல்கிசையில் காலமானார். அவரது பிரிவால் மிகுந்த மனவேதனையுறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பலாலி வீதி, திருநெல்வேலி.*

கீன் கல்வி நிலையம்
பதில் நிர்வாகி,
*ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.*

(96603)



## மரண அறிவித்தல்

### இலங்கேஸ்வரன் செல்லத்துரை

கொக்குவிலைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் செல்லத்துரை நேற்று (02.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யசோதாவின் அன்புக் கணவரும் சரஸ்வதியின் மகனும் பகவான், தேவராணி ஆகியோரின் மருமகனும் கணேஷ், பரினா, ஈசன், கௌசல்யா, உதயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரன், விஜயகுமார், ஸ்ரீதரன், ரஞ்சித்குமார், விஜயபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிறவுண் வீதி, கொக்குவில்.*

(96615)

தகவல்:
கி.தேவதாஸ்
(மைத்துனர்)

# காஷ்மீர் தீவிரவாதிகள் சுட்டு ஆறு இந்துக்கள் உயிரிழப்பு!

ஸ்ரீநகர்,ஜன.3

இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில் 6 இந்துக்களை கடந்த திங்கட்கிழமை இரவு தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

பூஞ்ச் மாவட்டத்தில் பின்தங்கிய மலைப் பிரதேசத்தின் மக்னார் கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கிராமத்தில் சிறுபான்மையினராக விருந்த இந்துக்கள் வசித்த வீடுகளைக் குறிவைத்து தீவிரவாதிகள் தாக்கியதாகவும் -

வீடுகளுக்குள் இருந்தவர்களை வெளியே இழுத்து வந்து சுட்டதில் 6 பேர் உயிரிழந்ததாகவும் - காஷ்மீர் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினர், தற்போதைய யுத்தச் சூழ்நிலையை அடுத்து எல்லைப் புறத்துக்கு நகர்த்தப்பட்டதாலேயே, தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்த முடிந்ததாகக் கிராமவாசிகள் கூறினர்.

கடந்த ஞாயிறன்றும் 4 இந்துக்கள் இதேபகுதியில் கொல்லப்பட்டமையை அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இதேசமயம் இமாசலப் பிரதேசந்தில் இராணுவ நிலை ஒன்றை தீவிரவாதிகள் தாக்கியதில் இந்திய இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர். (ஒ)

'சார்க்' மாநாட்டின் போது

# முஷாரப் - வாஜ்பாய் இடையே பேச்சு நடக்க வாய்ப்பு இல்லை!

## இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவிப்பு





புதுடில்லி,ஜன.3

'சார்க்' மாநாட்டின் போது பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் மற்றும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஆகியோரிடையே பேச்சு நடைபெறும் சாத்தியம் எதுவும் இல்லை என்று இந்தியா உறுதிபடக் கூறிவிட்டது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நாளைமறுதினம் 'சார்க்' எனப்படும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் தலைவர்களின் மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலநதுகொள்ளச் செல்லும் முஷாரபும், வாஜ்பாயும் அப்போது பேச்சு நடத்தக் கூடும் என்று ஊகங்கள் பரவியிருந்தன.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் மேற்படி ஊகங்களை முற்றாக நிராகரித்தார்.

தற்போதைய நிலைவரப்படி வெளியுறவு அமைச்சர்கள் நிலையில் பேச்சுக்கள் நடக்குமா என்பதைப் பற்றி கருத்துக் கூற அவர் மறுத்துவிட்டார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானிடையே எழுந்துள்ள பதற்றமான சூழ்நிலை, இந்திய எல்லைப் பகுதியில் இராணுவம் குவிக்கப்படுவது போன்றவை குறித்து அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டதாக ஜஸ்வந்த் சிங் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவில் இடம்பெற்ற பல்வேறு தீவிரவாதச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் 20 தீவிரவாதிகள் தற்போது பாகிஸ்தானில் தஞ்சமடைந்திருப்பதாகவும் -

அவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு விடப்பட்ட கோரிக்கைக்கு பாகிஸ்தானிடமிருந்து இதுவரை தகுந்த பதிலேதும் கிடைக்கவில்லை என்றும் -

அவர் கூறினார். (ஒ-9-ரி)

# ஐரோப்பிய நாணயங்களுக்கு 'யூரோ'வுடனான பெறுமதிகள்

ஜனவரி 1 முதல் பன்னிரு ஐரோப்பிய நாடுகளில் சட்டபூர்வமாகப் பாவனைக்கு வந்துள்ள 'யூரோ' நாணயத்துக்கும் அந்த நாடுகளின் உள்நாட்டு நாணயங்களுக்கும் இடையிலான பெறுமதிகள் வருமாறு:-

ஒரு யூரோவுக்கு -

| | |
|---|---|
| * பெல்ஜியம் பிராங் | - 40.33 |
| * ஜேர்மனி மார்க் | - 1.96 |
| * கிரேக்க ட்ரச்மர் | - 340.75 |
| * ஸ்பெயின் பெஸோடா | - 166.38 |
| * பிரான்ஸ் பிராங்க் | - 6.55 |
| * அயர்லாந்து பவுண்ட் | - 0.787 |
| * இத்தாலி லிரா | - 1936.27 |
| * ஸ்கஸம்பேர்க் பிராங்க் | - 40.33 |
| * நெதர்லாந்து கில்டர் | - 2.20 |
| * ஒஸ்ட்ரியா சில்லிங் | - 13.76 |
| * போர்த்துக்கல் எஸ்குடோ | - 200.48 |
| * பின்லாந்து மார்க் | - 5.94 |

'யூரோ' சில்லறை குற்றி நாணயங்கள் -

1 யூரோ, 2 யூரோ மற்றும் 1 யூரோ சதம், 2 யூரோ சதம், 5 யூரோ சதம், 10 யூரோ சதம், 20 யூரோ சதம், 50 யூரோ சதம் எனவும் -

யூரோ பண நோட்டுகள் -

5 யூரோ, 10 யூரோ, 20 யூரோ, 50 யூரோ, 100 யூரோ, 200 யூரோ, 500 யூரோ எனவும் -

மதிப்புக் கொண்டவைகளாக வெளியிடப்பட்டுள்ளன.



ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டின் வங்கி ஒன்றில் யூரோ நாணயத்தைப் பெற்றுக்கொள்ள நின்ற மக்களின் நீண்ட வரிசை.



அயர்லாந்தின் டப்ளின் நகர் மத்திய வங்கியில் யூரோ நாணயத்தைப் பெற்றுக்கொள்ள காத்திருப்பவர்கள்.



கிரேக்கத் தலைநகர் ரோமில் புதிய யூரோ நாணயத்தை மகிழ்வுடன் வாங்கும் உணவக உரிமையாளர் ஒருவர்.

மக்களின் வன்முறைக் கிளர்ச்சியை அடுத்து

# நெருக்கடிமிக்க இரண்டு வாரகாலத்தில் 5 அதிபர்களைக் கண்ட ஆர்ஜென்ரீனா!

புவனஸ்அயர்ஸ்,ஜன.3

மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள ஆர்ஜென்ரீனாவின் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும்.

இவ்வாறு அந்த நாட்டின் புதிய அதிபர் எடார்டோ டகல்டே கோரியுள்ளார்.

சுமார் 13 ஆயிரத்து 200 கோடி டொலர்கள் வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்த முடியாதுள்ளதாக ஆர்ஜென்ரீனா அரசு முன்னரே அறிவித்திருந்தது. இந்த நிலையில் பதவியேற்ற டகல்டே, புதிய பொருளாதார அமைப்பு ஒன்றை உருவாக்குவதாக உறுதியளித்துள்ளார்.

விசேடமாகக் கூடிய ஆர்ஜென்ரீன சட்ட அமைப்பான காங்கிரஸ் டகல்டேவை அதிபராக அறிவித்தது. கடந்த 5 வார காலத்துக்குள் அதிபராக அறிவிக்கப்பட்ட 5ஆவது நபர் டகல்டே ஆவார். இவர் 2003 இல் தேர்தல் நடக்கும் வரை ஜனாதிபதியாக இருப்பார்.

டகல்டே அதிபராக அறிவிக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் தலைநகர் புவனஸ்அயர்ஸின் வீதிகளில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தும்படி ஆர்ப்பாட்டங்கள் செய்தனர்.

பெரோனிஸ்ட் கட்சித் தலைவரான டகல்டே நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க தேசிய அரசொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இரு வாரங்களின் முன்னர் பொருளாதார நெருக்கடியால் தமது வாழ்க்கைத் தரம் மோசமாக சீர்குலைந்ததை எதிர்த்து ஆர்ஜென்ரீன மக்கள் வன்முறைக் கிளர்ச்சி செய்தனர்.

இதனையடுத்து அதிபர் பெர்னாண்டோ டிலாருவா கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி பதவி விலகினார். அதற்குப்பின் கடந்த இரு வாரங்களில் வேறு மூவர் அடுத்தடுத்து அதிபராக அறிவிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் எவரும் அதிபர் பதவியில் தாக்குப் பிடிக்கவில்லை.

தற்போது 5ஆவது நபராக டகல்டே அதிபராகப் பதவியேற்றுள்ளார். (ஒ)



ஆர்ஜென்ரீனாவின் புதிய அதிபரைத் தெரிவு செய்வதற்கு நேற்று முன்தினம் காங்கிரஸ் கூடிய சமயம் தேர்தலை உடனே நடத்தும்படி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது எடுக்கப்பட்டபடம்.

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஜன.3

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் காஷ்மீர்த் தீவிரவாத அமைப்புகளைத் தடைசெய்து அவற்றின் தலைவர்களை கைது செய்த போதிலும், எல்லைப்புறத்தில் இந்தியா தொடர்ந்து படைகுவிப்பில் ஈடுபட்டுள்ளதாகப் பாகிஸ்தானிய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

சுமார் நூறு தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய பாகிஸ்தானிய அரசின் பேச்சாளர், இதற்குப் பின்னரும் இந்தியா போரைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருப்பதாகக் கூறினார். (ஏ)

# தீவிரவாதிகள் – ரஷ்யப்படையினர் செச்சினியாவில் மீண்டும் மோதல்!

மொஸ்கோ,ஜன.3

செச்சினியத் தீவிரவாதிகளுக்கும் ரஷ்யப்படையினருக்கும் இடையே நீண்டகாலத்தின் பின்னர் பெரும் மோதல்கள் மூண்டுள்ளன.

செச்சினியத் தலைநகர் குறொஸ்னிக்குத் தென்கிழக்கில் உள்ள வேடிந்நியாவில் புதிதாக இரு தரப்பினரிடையே மோதல்கள் இடம்பெறுகின்றன.

தற்போதைய மோதல்கள் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை ரஷ்ய உளவுப் படையைச் சேர்ந்த ஒருவர் மட்டும் உயிரிழந்துள்ளதாகவும் -

மேலும் 6 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் -

ரஷ்யா கோரியது.

இதேவேளை, பத்துக்கும் மேற்பட்ட செச்சினியத் தீவிரவாதிகள் உயிரிழந்தாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக செச்சினியா மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையில் இதுவரை சுமார் 3ஆயிரம் ரஷ்யப் படையினர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

செச்சினியாவில் இடம்பெறும் ரஷ்யாவின் தாக்குதல்களை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலநாடுகள் முன்னதாகக் கண்டித்து வந்தன. ஆனால் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு ரஷ்யா ஆதரவளித்ததை அடுத்து அந்த நாடுகள் செச்சினிய விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவிக்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

உலக அரங்கில்

## பேரறிஞர் பேராயருக்கு பேரருள் பேறு



தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர்

### அதிவண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்

அடிகளார்களுக்கு லண்டன் கேம்பிரிட்ஜ் வரலாற்றாய்வாளர் நிறுவனம் இருபதாம் நூற்றாண்டுப் 'பேரறிஞர்' விருது வழங்கிச் சிறப்பித்தமையை அறிந்து மனம் மகிழ்ந்து எங்கள் பாராட்டுக்களைச் சமர்ப்பித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

பேரறிஞர் பேராயர் பல்லாண்டுகாலம் வாழ்ந்து, அவரின் பணிகள் சிறக்கவும், பெருகவும் எமக்குக் கிடைத்த பெரும்பேறாகவும் உறுதுணையாகவும் இருக்க ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.



யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனச் சமூகம்
மருதனார்மடம், சுன்னாகம்.
(96586)

## மரண அறிவித்தல்

### அருமைநாயகம் ராகுலன்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும், சுதுமலைச் சந்தி, மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருமைநாயகம் - மஞ்சுளா தம்பதிகளின் மகன் ராகுலன் 29.12.2001 சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் கொழும்பு ஸ்ரீ ஜெயர்த்தனபுர வைத்தியசாலையில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பு கனத்தை மயானத்தில் 29.12.2001 சனிக்கிழமை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

*சுதுமலைச் சந்தி,*
*மானிப்பாய்.*
(96587)

தகவல்:
க.அருமைநாயகம் (தகப்பன்).

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜன.3

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி "சைவசித்தாந்தம் வாழ்வுக்கானதொரு வழிகாட்டி" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (க-173)

## வீடியோ படப்பிடிப்பாளர் தேவை

வீடியோ படப்பிடிப்பில் அனுபவமுள்ளவரும் MX 50 மிக்சர் போடக் கூடியவரும் தேவை.

நிரந்தர மாதச் சம்பளம் வழங்கப்படும்.

**ரீகல் வீடியோ**
42/7, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2896 (96588)

**ENGLISH**
**SPOKEN AND GRAMMAR**
புதிய பிரிவு
(சனி, ஞாயிறு)

**By: BRITTO**

ஆரம்பம் :- 05-01-2002 சனிக்கிழமை
நேரம் :- பி.ப. 3.30 (ப.நே.)
இடம் :- கோக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்) (C/19072)

## நிலாமலர்



**அன்று வந்ததும் இதே நிலா**

லண்டனிலிருந்து யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு தேன் மலரைத் தேடி வருகிறது ஒரு காதல் வெண்ணிலா. காலங்கள் கடல் எல்லைகளைத் தாண்டி உறவுகள் மீண்டும் இணைகின்றன. *"நெஞ்செல்லாம் நினைவுதான்"* நாவலைத் தந்த குகனேந்திரனின் இந்த நாவலும் உங்களை மகிழ்விக்கும்.



(96592) ※ சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

விதையாய் 01 - 06 - 1934



சிதையாய் 18 - 12 - 1997

### அமரர் நல்லதம்பி வல்லிபுரம்

(B.Sc., M.Sc., Dip. in Ed. SLEAS II)

**திதி: 03-01-2002**

*எந்தையே நீங்கள் எமைப் பிரிந்து சென்று*
*நான்காண்டு காலம் மெல்ல நகர்ந்தாலும்*
*தந்தையில்லாத்துயர் தாங்க முடியாமல்*
*இன்றுவரை நாங்கள் ஏங்கித் தவிக்கின்றோம்*
*முந்து சிவன் திருவடியில் மூழ்கிக் கலந்திருந்து*
*எப்போதும் தப்பாமல் எங்களுடைய அப்பாவே*
*வந்தனைகள் செய்கின்றோம் வாழ்த்தி வரமருள்க!*
*வளமுடனே வாழ்ந்து நாம் விரும்பியதை எய்திடவே.*

*இல.45, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.
(96590)

# NEW SCIENCE HALL

## கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

# 2004 - A/L

## கணித, உயிரியல் பிரிவுகளுக்கான வகுப்புகள்

**ஆரம்பம்:-**

**09-01-2002 புதன் காலை 10.00 மணி.**

(எமது வழமையான ஆசிரியர் குழு)

*குறிப்பு:- இன்று 03-01-2002 வியாழன் காலை 8.00 மணி முதல் அனுமதி வழங்கப்படும். முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.*

(96593)

உதயன்

## வெறும் ஏட்டுக் கல்வி எமக்கு வேண்டாம்

சமூகத்துக்குள் ஊடுருவி சமூக மாற்றத்தைக் கொண்டுவரும் கல்வியே எமது இன்றைய தேவையாகும்.

குருநகரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய குருநகர் பங்குத் தந்தை அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளார் இப்படி வலியுறுத்தியிருக்கின்றார்.

எமது சமூக முன்னேற்றத்துக்கு உழைப்பை உருவாக்கும் கல்வியே அவசியம். ஆனால் நாமோ அரச உத்தியோகத்தையும், பல்கலைக்கழக அனுமதியையும், பட்டத்தையும் எதிர்பார்க்கும் கல்வியையே நாடுகின்றோம் என்று அவர் விசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாழ்க்கைப் பாதுகாப்பை இலக்கு வைத்துத்தான் இந்தக் கல்வியை நாம் நாடுகின்றோம் என்பது உண்மை. ஆனால் சமூகப் பாதுகாப்புக்கு இந்தக் கல்வி உதவப் போவதில்லை.

'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்பது போல வெறும் புத்தகப் பூச்சிகளாக நமது இளம் சமுதாயத்தை மாற்றும் இந்தக் கல்வி முறையால் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதை நாம் நோக்கவேண்டும்.

நமது மாணவர்கள் மத்தியில் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்வதாய் கல்விமுறை அமையவேண்டும் என்று ஜெயசேகரம் அடிகளார் சுட்டிக்காட்டும் கருத்து நீண்ட பல ஆண்டுகளாக நமது கல்விமான்களால் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

ஆனாலும் படிக்கும் பாடத்தைப் பாடமாக்கி ஒப்புவிக்கும் - இயந்திரத்தனமான - கல்வி முறையிலிருந்து நாம் மீளமுடியாமல் இருக்கின்றோம். அத்தகைய கல்வித் திட்டத்திலிருந்து நமது கல்விச் சமூகத்தை வெளிக்கொண்டுவர முடியாதவர்களாக நமது கல்வி வழிகாட்டிகள் இருக்கின்றனர்.

முயற்சி, சிந்தனைத் திறன் ஆகியவற்றை வளர்ப்பதும், அறிவுக் கூர்மையை விருத்தி செய்வதுமான கல்வி முறை நமது சிறார்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அது வெறும் புத்தகக் கல்வியாக அமையாமல் - அனுபவக் கல்வியாக - செயல் வழிப் பாடமாக - அமையவேண்டும்.

மாணவன் பார்வையாளனாக இருந்துகொண்டு புத்தகத்தைப் பாடமாக்குபவனாக இல்லாமல், பங்குதாரனாக இருந்துகொண்டு கல்விச் செயல்திட்டத்தில் அனுபவித்துக் கற்பவனாக இருக்கவேண்டும்.

அப்போதுதான் தன்னிடம் இருக்கும் முழுத்திறமையையும் அவனே கண்டுகொண்டு, அதை வெளிப்படுத்தும் வாய்ப்பும், அந்தத் திறமையை வளர்க்கும் சந்தர்ப்பமும் அவனுக்குக் கிட்டும்.

இவ்வாறு செயன்முறைக் கல்வியோடு (தொழில்துறைக் கல்வியோடு) உலக அனுபவத்தைக் கற்றுக்கொள்பவன் சிறந்த தலைமைத்துவம் உடையவனாகவும் புடம் போடப்படும் வாய்ப்பும் கிட்டுகின்றது.

அத்தகைய சந்தர்ப்பம் நமது இளம் சமூகத்துக்குக் கிட்டுவது சமூக மாற்றத்துக்கு - உயர்ச்சிக்கு - வளர்ச்சிக்கு - புரட்சிக்கு - வித்திடும் என்பது நிச்சயம்.

எழுத்து மூலமான பரீட்சை சித்தியை இலக்கு வைத்துக் கற்பதை விடுத்து செயல்முறையில் பெறுபேற்றுச் சித்தியை இலக்கு வைப்பதான கல்விப் போதனைக்கு நமது கல்வி முறையை மாற்றுவது இதற்கு அவசியமாகுகின்றது.

அத்தோடு இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் மைதானப் பயிற்சிகளையும் நாம் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

உடல் - உள வலிமை, தேகாரோக்கியம், நற்பண்புகள், குழுவாக இயங்கும் பழக்கம் என்று பல்வேறு திறமைகளை மைதானத்தில் நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

காலையில் சப்பாத்துடன் பஸ் ஏறும் மாணவன் பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலையை விட்டுப் புறப்பட்டதும் அவனுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பு முடிந்துவிடுகின்றது. பாடசாலையின் நிலத்து மண கூட அவனது காலில் படுவதில்லை.

அத்தகைய கல்வி முறையிலிருந்து எப்போது நாம் மீளுகின்றோமோ அன்றுதான் சமூக மறுமலர்ச்சிக்கான கல்விப்போக்கு நமக்குக் கிட்டும்.

# முன்னாள் பிரதமரின் மகன் தேர்தல் மனு தாக்கல்!

கொழும்பு,ஜன.3

தேர்தலில் தான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்க உத்தரவிடும்படி கோரி முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் மகன் விதுர விக்கிரமநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த தேர்தலில் பொ.ஐ.முவின் பட்டியலில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்டு விதுர விக்கிரமநாயக்க தோற்றுப்போனார். இவருடன் இணைந்து இதே மாவட்டத்தில் தேர்தலில் நின்ற இவரது தந்தையும் முன்னாள் பிரதமருமான ரத்னசிறி மிக சொற்ப வாக்கு வித்தியாசத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினரானார். இத்தனைக்கும் இவர்களது சொந்த ஊரான ஹொரணை களுத்துறை மாவட்டத்தில் உள்ளது.

ஐ.தே.முன்னணி பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட ரேணுகா ஹேரத், மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட்ட தர்மதாஸ பண்டா ஆகியோரும் தாம் தேர்தலில் தோற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து மனு தாக்கல் செய்துள்ளனர். இவர்கள் அனைவருமே விருப்புவாக்குகளை எண்ணுவதில் நிகழ்ந்த குளறுபடிகளாலேயே, தாம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படவில்லை என்று தத்தமது மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர். (க-ஒ)

## கந்தளாயில் கொள்ளை!

திருகோணமலை,ஜன.3

கந்தளாய்ப் பிரதேச இரத்தினக் கல் வியாபாரி ஒருவரின் வீட்டில் புத்தாண்டு பிறந்த நள்ளிரவில் 2 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

கந்தளாய் 91ஆம் கட்டை பிரதேசத்திலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. ஏழு பேர் கொண்ட ஒரு கோஷ்டி வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்திப் பணத்தை கொள்ளையிட்டுள்ளது.

கந்தளாய்ப் பொலீஸுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்படவே பொலீஸாரால் நாலுபேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து சுழல் துப்பாக்கி ஒன்றும் ஐந்து ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

மூன்று பேர் தப்பியோடியுள்ளனர். மேலதிக விசாரணைகளை கந்தளாய்ப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (க-3)

## நாட்டு நடப்பு

### நிம்மதி நிலைக்க வேண்டில்...!

மொட்டையாய் தலைச்சவரம் செய்து
முழுதுமாய்க் காவிதனைப் பூண்டு
பட்டினத்தை விட்டகன்று பிக்கு
பலமைல் காடுவரை நன்னடி
விட்டோம் அரசியலை என்று
வியந்து போதனைகள் செய்து
இட்டமுடன் புத்தபிரான் சொன்ன
அகிம்சைவழி தாம்வாழ்ந்து கொண்டு
நிட்டையில் இருப்பார்கள் ஆயின்
நிம்மதி நிலைத்திடும் நாட்டில்!

- விகடகவி.

# கிடைத்த வெளிநாட்டு உதவியில் 32 ஆயிரம் கோடி ரூபாவை பயன்படுத்தாது வீணாக்கிவிட்டது ஸ்ரீலங்கா அரசு!

கொழும்பு,ஜன.3

2001ஆம் வருடத்திற்காக ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி 3,745 மில்லியன் டொலர்களில் 338 டொலர்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன என நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி 2001ஆம் ஆண்டு கிடைத்த வெளிநாட்டு உதவியில் 3,407 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்படாததால் வீணாக்கி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொகை இந்நாட்டு நாணயத்தில் 32 ஆயிரம் கோடி ரூபாவாகும்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தின்படி 2001ஆம் ஆண்டு தொடர்பான அரசின் செலவினம் 33 ஆயிரம் கோடி ரூபாவாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி உதவி வழங்கியிருந்தன.

கிடைத்த மொத்த வெளிநாட்டு உதவியில் 13 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி 87 சதவீதத்தை பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொ.ஐ. முன்னணி அரசு பயன்படுத்தத் தவறிவிட்டது.

கடந்த ஆண்டு கிடைத்த வெளிநாட்டு உதவியில் பயன்படுத்தப்படாத நிதி குறித்து எதுவும் செய்ய முடியாது எனவும் ஸ்ரீலங்காவுக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி அதிஉச்ச பலனைப் பெறத் திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (க)

### காங்கேசன் தடுப்பு முகாமில் உள்ள

# மீசாலை குடும்பத்தவரில் மூவர் வார இறுதிக்குள் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,ஜன.3

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீசாலையைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் ஆகிய மூவரும் வார இறுதிக்குள் விடுவிக்கப்படவிருக்கின்றனர்.

அங்குசென்ற இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தடுப்பு முகாம் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அதையடுத்து இவர்கள் விடுவிக்கப்படவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீசாலையில் வீடு ஒன்றைச் சுற்றி வளைத்த படையினர் அங்கு இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர்.

அதைத்தொடர்ந்து அந்த வீட்டில இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் அவர்களது மூன்று மகன்மாரையும் படையினர் கைதுசெய்திருந்தனர்.

இவர்கள் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தடுப்பு முகாமுக்குச் சென்ற அமைச்சர் மகேஸ்வரன் அங்குள்ள அதிகாரிகளுடன் இவர்களின் விடுதலை குறித்துப் பேசியிருந்தார். (க-3)

# விடைத்தாள் மதிப்பிடும் பணி பொங்கல் தினமன்று வேண்டாம்

### பரீட்சை ஆணையாளருக்குக் கடிதம்

கொழும்பு,ஜன.3

தைப்பொங்கல் தினமன்று ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பீடும் பணியை மேற்கொள்வதை நிறுத்தவேண்டும் என்று பரீட்சை ஆணையாளரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

பரீட்சை ஆணையாளருக்கு ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது நடந்துமுடிந்த பரீட்சைக்குரிய விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி இந்த வாரத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

தைப்பொங்கல் தினத்தன்றும் இந்தப்பணி இடம்பெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

நத்தார் மற்றும் போயா தினங்களில் பரீட்சைகளை நடத்தாத பரீட்சைத் திணைக்களம், இந்துக்களின் முக்கியமான தைப்பொங்கல் தினத்தன்று பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி இடம்பெறும் என்று அறிவித்துள்ளது. இது இந்துக்களின் மனதைப் புண்படுத்துவதாக அமைகிறது எனவே அனைத்து மதங்களினதும் உணர்வுகளை ஒரே விதமாக மதித்து நடக்கவேண்டும் - என்றுள்ளது. (க-9-ரி)

# ஏழை மாணவருக்கு உதவ கலைஞானி பெயரில் நிதியம்

## தமிழ்க் காங்கிரஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.3

மறைந்த மாமனிதர் கலைஞானியின் பெயரில் நிதியம் ஒன்றை அமைத்து வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு அதன் மூலம் உதவியளிக்க அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்க் காங்கிரஸின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் எஸ்.ஐங்கரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-


மாமனிதர் கலைஞானியின் இழப்பு தமிழினத்தினால் ஈடுசெய்யமுடியாதது. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்ட தமிழ் இனம் இம்மண்ணின் உரிமையுடைய இனம் என ஆதாரபூர்வமாக நிலைநிறுத்திய பெருமை மாமனிதர் கலைஞானியையே சாரும்.

இந்த அளப்பரிய சேவைக்காகவே அவருக்கு 1991இல் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனால் மகத்தான 'மாமனிதர்' பட்டம் வழங்கப்பட்டது. வாழும் காலம் வரை மகத்தான சேவை செய்து, மகோன்னதமான தமிழ் பெருமையை நிலைபெற உழைத்த மாமனிதர் கலைஞானி.

அவரின் இழப்பால் எமது தொகுதி மக்கள் கதிகலங்கி நிற்கின்றனர். அண்ணரின் முதலாம் மாத நினைவு தினத்தன்று வட்டுக்கோட்டைப் பகுதியில் 'மாமனிதர் கலைஞானி ஞாபகார்த்த நிதியம்' ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாக இப்பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை ஆண்டுதோறும் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (க-ஒ)

## சாயி சிந்தனை



### தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்!

தெய்வத்தின் மேல் உள்ள பிரேமை குறைந்து போவதால்தான் மனிதன் இன்று பலவகையான துன்பங்களில் ஆழ்ந்துவிடுகிறான். அதனால் முதலில் உன்னிடம் (ஆத்ம விசுவாசத்தை) தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்!

ஆத்மாவே நம் தாய்! எல்லாமே ஆத்மாவிடமிருந்து பிறந்தவைதான். உலகில் காணும் அத்தனை வடிவமும் ஆத்ம ஸ்வரூபமே!

மனிதன் என்றால் நீ காணும் வெறும் வடிவமில்லை. ஆனால் மனிதன உடலைப் பற்றிய மாயையில் மயங்கி விடுவதால் அவனுக்குக் கிடைக்க வேண்டியவை கிடைப்பதில்லை.

கடவுள் பத்ரிநாத்திலோ, கேதார் நாத்திலோ, திருப்பதியிலோ, ரிஷிகேசத்திலோ இல்லை. இவை எல்லாம் கிளை அலுவலகங்கள். உன் இதயம்தான் கடவுளின் தலைமை அலுவலகம்.

உன் இதயத்திலே கடவுள் இருக்கிறார். அதனால் முதலில் மனிதன் தன் பேச்சை நிறுத்தி இதயத்தினுள் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

வடிவங்கள் அனேகமானாலும் இதயம் மட்டும் ஒன்றே. அதனால் ஒவ்வொரு மனிதனும் வாயை மூடிக்கொண்டு இதயத்தைத் திறந்து கொள்ளவேண்டும்.

## பிரதேச சபைக்கு புதிய டிராக்டர்!

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபைக்கு வடக்கு புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அதிகார சபையினால் புதிய டிராக்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

டிராக்டர் கையளிக்கும் வைபவம் கடந்த திங்களன்று பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (க-117)

## உதயவாக்கு

மணித்தியாலக் கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுது உதவிசெய்வது மிகவும் சிறந்தது.

## நாளை

மார்கழி 20
வெள்ளிக்கிழமை
(04-01-2002)
திதி : பஞ்சமி
காலை 7.25 வரை.
ஷஷ்டி வைகறை 5 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன்இரவு 7.20 வரை.
சுபநேரம் : 6.30 - 8.00
ராகுகாலம் : 11.00 - 12.30
(பழைய நேரப்படி)

# ஆசிரியர் கல்வியில் உள்ளகப் பயிற்சி

## அதன் தேவையும் முக்கியத்துவமும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கில் முதலாவது அணி மாணவர்கள் தமது இரண்டு வருட வதிவிடப் பயிற்சியினை முடித்துக கொண்டு கற்பித்தலில் உள்ள கப் பயிற்சியினை மேற்கொள்ளுவதற்குத் தயாராகின்றனர். கல்வியயற் கல்லூரிகளின் செயலொழுங்கில் இந்த உள்ளகப் பயிற்சியானது (Internship Training) மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். கடந்த இரண்டு வருடங்களாகத் தாம் கற்றவற்றை - அறிந்தவற்றை நடைமுறைப்படுத்திப் பார்த்து உறுதி செய்கின்ற அல்லது தேவை கருதி மாற்றத்துக்குள்ளாக்குகின்ற அல்லது மேலும் வினைத்திறனுடைய தாக்க மெருகேற்றுகின்ற காலமாக இது அமைவதால் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாக மதிப்புப் பெறுகின்றது.

### கல்வியியற் கல்லூரிகளும் நிர்வாகமும்

"ஆசிரியரொருவர் பயிற்சியில்லாது வகுப்பறை செல்லக் கூடாது" என்ற கருத்தினை முழுமையாக உள்வாங்கி உருவாக்கம் பெற்றதே கல்வியியற் கல்லூரிகளாகும்.இன்று இலங்கையில் 17 கல்வியியற் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, தர்காநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரிகளில் தமிழ்மொழி மூலமும, வவுனியா, ஸ்ரீபாத, ருகுணு ஆகிய இடங்களில் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் தமிழ்மொழி, சிங்கள மொழி ஆகியன மூலமும் பாடநெறிகள் நடைபெறுகின்றன. மற்றும் அட்டாளைச்சேனை கல்வியியற் கலலூரிக்குத் தனித்து முஸ்லீம் மாணவர்களுக்கு அனுமதியும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்குத் தனித்து மலைநாட்டு மாணவர்களுக்கு அனுமதியும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவை யாவும் மத்தியரசின் நிர்வாகத்தின் கீழ் மையப்படுத்தப்பட்டுள்ளன. பிரதம ஆணையாளர் கல்வியியற் கல்லூரிகளின் நிர்வாகத்திற்கு நேரடியாகப் பொறுப்பானவர். அவர் கல்வி அமைச்சின் செயலாளரின் வழி நடத்தலுக்குட்பட்டவர். கல்வி அமைச்சில் கல்விக் கல்லூரிகள் கிளை, கல்விக் கல்லூரிகளின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றது. கல்விகல்லூரிகள் யாவும் 'A' தர நிர்வாக அலுவலகமாகத் தொழிற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதன்வழி கல்வியியற் கல்லூரிகள் தன்னாதிக்கமுள்ள - திறன் பொருந்திய - நிர்வாக அலகாகக் கருமமாற்ற ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

கல்வியியற் கல்லூரிகளுக்கு பீடாதிபதி (President) பிரதான நிறைவேற்று அதிகாரியாகக் கடமை புரிகின்றார். அவர் நேரடியாக பிரதம ஆணையாளருக்கு வகை கூற வேண்டியவராவார்.

பீடாதிபதிக்கு உதவியாக 3 உப பீடாதிபதிகள் கடமை புரிவர்.

1.உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)

2. உப பீடாதிபதி (நிர்வாகமும் நிதியும்)

3.உப பீடாதிபதி (தொடருறு கல்வி)

இவர்களுடன் மேற்கூறிய ஒவ்வொருதுறைக்கும் ஒவ்வொரு விரிவுரை இணைப்பாளர் கடமை புரிவர். மேலும் உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்) அவர்களது கல்வி சார் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக 2 Deans விரிவுரையாளர்களிடமிருந்து நியமிக்கப்படுவர்.


### கல்வியியற் கல்லூரிகளும் வேலைவாய்ப்பும்

கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுகின்ற மாணவர்கள் தமது பயிற்சி முடிவில் ஆசிரியத் தொழிலைப் பெறுதல் உறுதி செய்யப்பட்டுள்ளது. பயிலுநர் ஒருவர் 3 வருட பயிற்சியினை முழுமையாக - வெற்றிகரமாக - பூர்த்தி செய்யுமிடத்து அவரது தொழில் வாய்ப்பு உறுதி பெறும். எனவே, கல்வியியற் கல்லூரிகளில் அறிவு மட்டும் வழங்கப்படாது அறிவுடன் சேர்த்து எதிர்கால வாழ்வுக்கு வேண்டிய தொழில் வாய்ப்பும் உறுதி செய்யப்படுவதால் கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கும், கல்வியை மேற்கொளவதற்கும் நாடு முழுவதும் பெரும் ஆர்வம் காட்டப்படுகிறது.

இவ்வாய்ப்பு யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கு இங்கு ஒரு தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்படும் வரை மட்டுப்படுத்தப்பட்டேயிருந்தது.

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ஆம் ஆண்டு வைகாசி மாதம் உதயமாயிற்று. இங்கு மொத்தம் எட்டு பாடநெறிகளுள்ளன. அவை ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், நடனம், சித்திரம், சங்கீதம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும். இவற்றுள் ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் இரண்டு பாடநெறிகளும ஆங்கில மொழி மூலமானவை. ஏனைய தமிழ்மொழி மூலமானவை. சகல பாடநெறிகளுக்கும் க.பொ.த. உ/த சித்தி பெற்றிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட கூட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலப் பாடநெறிக்கு க.பொ.த சா/த "D" சித்தியும் நூலக விஞ்ஞானப் பாடநெறிக்கு சா/த "C" சித்தியும் மிக அவசியமானது. இவையிரண்டுக்கும் போதனா மொழி ஆங்கிலமாகவிருப்பதால் இவ்வேற்



பாடு பின்பற்றப்படுகிறது. க.பொ.த. சா/த "C" சித்தி பெற்று க.பொ.த. உ/த.வில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்று சித்தி பெற்றிருப்பினும் ஆங்கிலப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இன்று எமது பகுதியில் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறை வெகு மோசமாக நிலவுகின்றது. இதனை உணர்ந்து ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களை வழிகாட்ட வேண்டும்.

கலாநிதி
**திருநாவுக்கரசு கமலநாதன்**
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

இதேபோன்று யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் உள்ள துறைகளில் சிலவற்றிற்கு கடுமையான போட்டியும், உதாரணமாக ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு கடுமையான போட்டியுள்ளது. ஆனால் சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற துறைகளில் போதிய மாணவர்கள் தெரிவாவதில்லை. இதற்கு முக்கிய காரணம் க.பொ.த. உ/தரத்தில் மேற்படி பாடங்களை மாணவர்கள் கற்றிராமையே. அவர்கள் அவ்வாறு கற்க முடியாததற்கு பாடசாலைகளில் அவற்றைக் கற்பிப்பதற்கு ஆசிரியரில்லாமை காரணமாகக் கூறப்படுகின்றது. ஆசிரியரில்லாததால் மாணவரில்லை. மாணவர்கள் கற்காததால் ஆசிரியராக முடியாத நிலையென்று ஒரு நச்சு வட்டம் இங்கு தொழிற்படுகின்றது. இதையும் அதிபர், ஆசிரியர்கள், கல்வியுலகம் உணர்ந்து ஆக்கபூர்வ காரியத்தில் ஈடுபட வேணடும். எமது சமுதாய வளர்ச்சிக்கு தூரநோக்கு இங்கு மிகமிக அவசியம்.

### முன்பயிற்சியும் தொடருறு கல்வியும்

ஆசிரியர் கல்வியில் முன்பயிற்சியினை வழங்கும் பிரதான கடமையினை கல்வியியற் கல்லூரிகள் கொண்டுள்ளன. இப்பணியுடன் தற்போது ஆசிரியர்களுக்குத் தொடருறு கல்வியினை வலயக் கல்விப் பணிமனையுடன் இணைந்து வழங்கும் பொறுப்பும் கல்வியியற் கல்லூரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது. தொடருறு கல்வியில், கல்வியியல் சார்ந்த சகல நடவடிக்கைகளுக்கும் கல்விவியற் கல்லூரிகளே பொறுப்பாகக் கடமையாற்றுகின்றன. ஆசிரிய சேவை முன் பயிற்சியினை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கையில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பட்டதாரி ஆசிரிய நியமனம் தவிர்ந்த ஏனைய ஆசிரிய நியமனங்கள் யாவும கல்வியியற் கல்லூரிகள் ஊடாகவே நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. நாட்டின் கல்வித் தேவைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கல்வியியற் கல்லூரி ஊடாக பாடசாலைகளுக்கு நியமனம் பெறுகின்றனர். இதன் போக்கில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் இதுவரை இயங்கி வந்த ஆசிரிய கலாசாலைகள (Teacher Colleges) இரண்டாயிரத் தொராம் ஆண்டுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, அவற்றில் சில தொடருறு கல்வி வழங்கும் ஆசிரிய மையங்களாகவும் சில கல்வியியற் கல்லூரிகளாகியுமுள்ளன. உலகக் கல்விச் செல்நெறியினையும் இலங்கையின் கல்விச் செல்நெறியையும் தெளிவாக நாம் அறிந்து கொள்ள முயற்சிக்கவேண்டும். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப் போமேயானால் எமது சமூகத்துக்கு பெரும். துரோகமிளைத்தவர்களாவோம்.

கல்வியுலகில் என்நலம் - சுயநலமில்லாது பொதுநோக்கு மிக அவசியமானது.

பல்வேறுபட்ட பிரச்சினைகள், சிக்கல்கள், கஷ்டங்கள் இருந்தாலும் கல்வியில் என்றும் சளைக்காது எமது மண். கல்வியை உயிரிலும் மேலாக மதிக்கின்றது. அதனைப் பாழடித்துவிடக்கூடாது.

எனவே பரந்த நோக்குடனான சிந்தனை எம்மிடையே மிக அவசியமானது.

உலகில் ஆசிரியர் கல்வி பலவாறாக விரிந்து வளர்ந்து செல்கின்றது. அதன் வழி சமூக எழுச்சியை ஏற்படுத்த முனைகின்றார்கள். வெற்றியும் கண்டுள்ளார்கள். எடுத்துக்காட்டுகளாக கனடா, சிம்பாவே நாட்டின் ஆசிரியர் கல்வி முறையை அவதானிக்கலாம்.

### கனடா நாட்டில் ஆசிரியர் கல்வி

கனடா நாட்டின் ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் நியமனமும் சிறப்பானவை. எமது நாட்டின் ஆசிரியர் கல்வி, ஆசிரியர் நியமனம் என்பனவற்றிலிருந்து முற்றிலும் அவை வேறுபட்டவை. அங்கு பட்டதாரியொருவா தான் ஆசிரியராக முடியும். அதிலும் மூன்று வருட பட்டதாரிப்படிப்புடன் ஒரு வருட கல்வியியல் (B.Ed) பட்டத்தையும் இணைத்துக் கற்றே அவர் ஆசிரியர் தொழிலுக்குத் தகுதியானவராகலாம்.

பட்டதாரிப் படிப்பை மேற்கொள்ளுகின்றவர்கள் விருப்புடன் மேலும் ஒருவருடக் கல்வியியல் பட்டத்துக்காகக் கற்று ஆசிரியராகத் தகுதி பெறமுடியும். அவ்வாறு கற்றுமுடித்துத் தகுதி பெற்றால் மட்டும் அவர் ஆசிரியராகிவிடமுடியாது. அதன் பின் அங்கு நடைமுறையிலுள்ள கல்விச்சபையிடம் விண்ணப்பித்து கற்பித்தல் தொழிலைப் புரிவதற்குத் தகுதியானவர் என்ற சான்றிதழ் பெறவேண்டும். அதன் பின்பே அவர் ஆசிரியராக வாய்ப்பேற்படும்.

இங்கு பலம் பொருந்திய, பெருந் தொகையான அங்கத்தவர்களைக் கொண்ட ஆசிரியர் சங்கம் உண்டு. ஆனால் அது ஆசிரிய நியமனத்திலோ இடமாற்ற விடயங்களிலோ தலையிடுவதில்லை. ஆசிரியர்களுக்கு வேண்டிய நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றது.

எனவே -

1) கனடாவில் ஆசிரியர்கள் பயிற்சியின் பின்பே வகுப்புகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

2) ஆசிரியர்கள் தாம் விரும்பியே ஆசிரியத் தொழிலுக்கு வருகின்றனர். (இலங்கையில் பலர் வேலை எதுவும் கிடைக்கவில்லையென்றால் ஆசிரியராவர்)

3) கல்விச்சபையின் கடுமையான நடைமுறையின் பின்பே ஆசிரியராக அனுமதி கிட்டும்.

4) ஆசிரிய நியமனத்தில் எவ்வித அழுத்தமும் எவராலும் ஏற்படுத்தப்படுவதில்லை.

இவ்வேற்பாடுகளால் கனடா துரித வளர்ச்சி பெற முடிகின்றது. பல சவால்களை எதிர்கொண்டு வெற்றி காண்கின்றது.

### சிம்பாப்வே நாட்டின் ஆசிரியர் கல்வி

சிம்பாப்வே நாட்டின் ஆசிரியர் கல்வி இன்னொரு வகைச் சிறப்புடையது. கனடா, இலங்கை இரண்டையும் விட சிறிது வித்தியாசமானது. இலங்கையில் இரண்டுவருடம் கோட்பாடு கற்று பின்னர் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்க உள்ளகப் பயிற்சி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதனை மேலே கண்டோம். சிம்பாப்வே நாட்டில் முதல் வருடம் கோட்பாட்டுக் கல்வி வழங்கப்படும். இரண்டாம் வருடம் உள்ளகப் பயிற்சி நடைபெற்று பின்னர் மூன்றாம் வருடம் இரண்டாம் வருடம் பெற்ற அனுபவங்கள் ஆராயப்பட்டு சரியானவை அடையாளம் காணப்பட்டு பின்பற்றப்பட ஏனையவை விலக்கப்படும் அல்லது கோட்பாட்டுடன் இணைந்து மாற்றத்துக்குள்ளாக்கப்படும். இம்முறையும் பெருமளவு பலராலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எவ்வாறெனினும் கனடாவின் ஆசிரியக்கல்வி, சிம்பாப்வேயின் ஆசிரியக்கல்வி ஆகிய சேவைக்கு முன்பயிற்சி வழங்கும் முறைகளாகவேயுள்ளன.

இவை போன்றதுதான் இலஙகையில் கல்வியியற் கல்லூரிகள் வழங்குகின்ற சேவை முன்பயிற்சியும். இங்கு இரண்டுவருடக் கோட்பாட்டுக்கு கல்வியினைத் தொடர்ந்து உள்ளகப்பயிற்சி இடம்பெறுகின்றது. இந்த வரிசையில்தான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனது முதலாவது அணி மாணவர்களை 2002 ஜனவரி முதல் உள்ளகப் பயிற்சிக்கு ஆயத்தம் செய்துள்ளது.

அவ்வருடம் முழுவதும் ஆசிரியப் பயிலுநர்கள் பொருத்தமான பாடசாலை ஒன்றில் இணைக்கப்பட்டு முழு நேரமாக உள்ளகப் பயிற்சியில ஈடுபடுத்தப்படவுள்ளனர். இக்காலப் பகுதியில் முக்கியத்துவம் கருதி பல கட்டுப்பாடுகளை கல்வியியற் கல்லூரிக் கிளை விதித்துள்ளது. அதில முக்கியமாக ஆசிரியப் பயிலுநர்களால் பெறக்கூடிய லீவு பத்து நாள்கள் மட்டுமே. அதுவும் மிக அவசியம் எனக் கருதினால் மட்டுமே அனுமதி பெற்று அதனைப் பயன்படுத்த முடியும். அத்துடன் ஆசிரியப் பயிலுநர் ஒருவர் பாடசாலையில் 15 பாடவேளைக்கு மேற்படாதும் குறையாதும் கற்பித்தலிலும் ஈடுபடவேண்டும் என்பது முக்கியமானவை.

### உள்ளகப் பயிற்சியில் பாடசாலையும் சமூகமும்

உள்ளகக் கற்பித்தல் பயிற்சி வெற்றிபெற பாடசாலையினதும் அதுசார்ந்த சமூகத்தினதும் பங்களிப்பு மிக அவசியமாகின்றது. ஆசிரியவாண்மை விருத்திக்கு வேண்டிய அனுபவத்தினைப் பெறும் பொருட்டு உள்ளகப் பயிற்சி நோக்கி பாடசாலைகளுக்கு வரும் தேசிய கல்வியியற் கல்லூரி பயிலுநர்கள் வயதில் குறைந்தவர்கள் - கல்வியியற் கோட்பாடுகளை அறிந்தவர்கள். இரண்டுவருட வதிவிடப் பயிற்சிக் காலத்தில் கற்பித்தல் பயிற்சியினை (Block Teaching Practice) பாடசாலைகளில் 4 கட்டங்களாக மேற்கொண்ட அனுபவமுடையவர்கள். அது தொடர்பான விசேட கல்விசார் பயிற்சியினை (Educational Practice) வாரந்தோறும் பயின்றவர்கள். இவை தவிர அவதானிப்பு வகுப்புக்கள் (Observation Classes), நுண்முறை கற்பித்தல் (Micro Teaching) போன்ற நவீன கற்பித்தல் உத்திகளிலும் பழக்கப்பட்டவர்கள்.

இவ்வாறு கற்பித்தலில் பல்வேறு அனுபவங்களை அவர்கள் பெற்றிருக்கின்றபோதும் பாடசாலை ஒன்

(7ஆம் பக்கம் பார்க்க) .


**காணவில்லை**

149 - 4753ஆம் இலக்கம் கொண்ட பஜாஜ் (BAJAJ) மோட்டார் சைக்கிள் 29.12.2001 சனிக்கிழமை மாலை 7.00 மணியளவில் மருதனார்மடம் சந்திக்கு அருகாக வைத்து காணாமற் போய்விட்டது. இது பற்றிய சரியான தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அடிச்சட்ட இலக்கம்: 31-F-BDE - 22113, இயந்திர இலக்கம்: 31-M-BDE - 23330. மொடல்: 4S CHAMPION. கலர்:- சிவப்பு.

*தகவல் தரவேண்டிய முகவரி:*

*சி.சண்முகானந்தரன்,*

கிராம அலுவலர், தில்லைகலட்டி, சுன்னாகம். (96571)

**16ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 26 - 05 - 1935



உதிர்வு 20 - 12 - 2001

**அமரர் நடராசா இரத்தினகோபால்**

*(ஓய்வுபெற்ற மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்)*

அவர்களது 16ஆம் நாளாகிய இன்று (03.01.2002) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*235, வி.மு.வீதி, பருத்தித்துறை.*

- குடும்பத்தினர்.

(95539)

# வன்னிக்குச் செல்லும் பொருள்களுக்கு வரி அறவீடு செய்வது சட்டவிரோதம்

## உள்துறை அமைச்சருக்கு ஈ.பி.டி.பி. கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.3

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் வாழும் மக்களுக்கு எடுத்துச்செல்லப்படும் பொருள்களுக்கு வரி அறவிடப்படும் சட்டவிரோதச் செயலை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியுள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வரி அறவீடுகள் மேற்கொள்கின்றன. குறிப்பாக வவுனியாவிலிருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச்செல்லும் ஒவ்வொரு லொறியும் சுமார் பதினோராயிரம் ரூபாவை இவ்வாறு சட்டவிரோத வரியாகச் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இது கட்டுப்பாடற்ற பகுதியில வாழும் மக்கள் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமையை ஏற்படுத்துகின்றது. எனவே இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மேற்கொள்ளும் இத்தகைய வரி அறவீடுகள் குறித்து அண்மையில் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவும் பகிரங்கமாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார். இந்த வரித் தொகையை வன்னி வாழ் மககளே சுமக்கவேண்டியவர்களாக உள்ளனர்.

எனவே சட்டவிரோத வரி அறவீடுகளைத் தவிர்க்கும் வகையில் இவ் விடயத்தில் தாங்கள் உடனடியாக நேரடிக்கவனம் செலுத்தவேண்டும் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# தென்மராட்சி மக்களின் பொருள்களை டிராக்டரில் ஏற்றிவந்த இருவர் கைது!

தென்மராட்சி,ஜன.3

தென்மராட்சியில் இருந்து, இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளில் இருந்து திருடிய பொருள்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிவந்த இருவர் பொலீஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் வீட்டுத்தளபாடங்களை அபகரித்து அவற்றை உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கடத்த இவர்கள் முனைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப்பகுதிப் பொலீஸார் இந்த உழவு இயந்திரம்மீது சந்தேகம்கொண்டு அதனைச் சோதனையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து வாகனத்தையும், இரு சந்தேகநபர்களையும் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

எதிர்வரும் 7ஆம் திகதிவரை இருவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(க-3-117)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் சபையினரால் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு 'சிவப்பணி அரசு' என்ற பட்டமளிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த மணிவாசகர் விழாவில் அருட்கவி சீ.விநாசித்தம்பி அமைச்சருக்குப் பட்டத்தை வழங்கியபோது எடுத்த படம். (ஓ-73)

## இசையரங்கு

மருதனார்மடம், ஆஞ்சநேயர் ஆலயத்தில் நேற்றுப் புதன்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தெய்வீக இசையரங்கும் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய இசையரங்கில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி சிவப்பிரியா வைரமுத்துவின் பாட்டுக்கச்சேரி நடைபெறும். (க-10)

### பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்க

# அன்பளிப்புக் கோரும் அதிபர்களால் தென்மராட்சிப் பெற்றோர் பாதிப்பு!

தென்மராட்சி,ஜன.3

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியுள்ளவர்கள் அங்குள்ள பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை அதிபர்கள் அன்பளிப்பாகக் கேட்பதே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

தரம் 1, தரம் 6 ஆகிய வகுப்புகளில் அனுமதிகோரி விண்ணப்பித்த போது இவ்வாறு அதிபர்கள் அன்பளிப்புக் கேட்பதாகப் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் இடம்பெயர்வின் பின்னர் வெவ்வேறு இடங்களில் இயங்குவதால் வலிகாமத்தில் தங்கியுள்ள தென்மராட்சி மக்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு அனுமதி கோரிவருகின்றனர். (ஜ-(17)

# ஆசிரியர் கல்வியி....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

றில் முழுமையாக இணைக்கப்பட்டு கடமையாற்றப்போவது இதுவே முதற்றடவையாகும் எனவேதான் உளளகப் பயிற்சியில் பாடசாலையினதும் சமூகத்தினதும் முழு ஒத்துழைப்பையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் பெரிதும் வேண்டி நிற்கின்றது. இதுவரை குறைந்த வசதிகளுடன் கல்வியியற் கல்லூரியின் குழந்தைகளாக இருந்தவர்கள் உள்ளகப் பயிற்சி என்ற செயற்பாட்டுடன் சமூகத்தின் சொத்துக்களாகி பாடசாலைகள் மூலம் சமூகப்பணியில இறங்குகின்றார்கள். அவர்களுக்கு யாழ்ப்பாண சமூகமும் பாடசாலைகளும் முழு ஆதரவையும் வழங்கும் என்பது எமது நம்பிக்கை.

பல்வேறு காரணங்களை மனதிருத்தி உள்ளகப் பயிற்சியில் அக்கறையுடன் கருமமாற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரின் (G.T.Z) ஆலோசனைகளுக்கிணங்க யாழ்.மாவட்டத்தின் சில பாடசாலைகளிலேயே எமது ஆசிரிய பயிலுநர்கள் இணைக்கப்படுகின்றனர். மிகக் குறைந்தளவு பயிலுநர்களே முதலாவது அணியிலிருப்பதால் பெரும்பாலான பாடசாலைகளில் அவர்கள் இணைப்பினைப் பெற்று அனுபவம் பெற வாய்ப்பில்லாமல் உள்ளது. இனிவரும் காலங்களில் இக்குறை நீக்கப்படலாம்.

உள்ளகப் பயிற்சிக்காக பாடசாலைகளில் இணைப்புப் பெறுகின்ற பயிலுநர் அப்பாடசாலையில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்பும் தன்மை கொண்டவராகக் கருதக் கூடாது. குறிப்பிட்ட பாடசாலையில் உள்ள குறிப்பிட்ட துறைசார்ந்த சிரேஷ்ட ஆசிரியர் வழிகாட்டலில் (அவர் வாண்மைப்படுத்துநர் [MENTOR] என்று அழைக்கப்படுவார்.) கருமாற்றவேண்டியவர். அவ்வாறான MENTOR பெறக்கூடிய பாடசாலைகளே உள்ளகப் பயிற்சி நடைபெறக்கூடிய பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்படவேண்டுமென்பது GTZ நிறுவனத்தின் முக்கிய பணிப்புரையாகும்.

அடுத்த வருட முற்பகுதியளவில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சியினை மேற்கொள்ளவிருக்கும் பாடசாலை அதிபர்கள், MENTORS என்று அழைக்கப்படுகின்ற வாண்மைப்படுத்துநர், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகியோருக்கான செயலமர்வு ஒன்று கொழும்பு GTZ நிறுவனத்தினரால் எமது கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வாண்மைப்படுத்துநர்**

உள்ளகப் பயிற்சியில் வாண்மைப்படுத்துநருடைய (MENTORS) பங்களிப்பு மிக முக்கிய வகிபாகத்தை (Role) கொண்டுள்ளமை அவதானத்திற் கொள்ளப்படவேண்டியதொன்றாகும். ஆசிரியப் பயிலுநரை வாண்மைப் படுத்துவதற்கு அவர் பல கருமத் தொடர்களை ஆற்றவேண்டியவராகவுள்ளார். இதன்போது அவரிடத்து சில குறிப்பிட்ட தகைமைகள் வேண்டப்படுகின்றன.

ஆரம்ப வகுப்புகளுக்குரிய வாண்மைப்படுத்துநர் ஆரம்பவகுப்புகளில் குறைந்தது 5 வருட கற்பித்தல் அனுபவம் உடையவராகவும் பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பட்டம் பெற்றவராக இருப்பதுடன் புதிய ஆரம்பக் கலைத்திட்டத்தில் முழுமையான அறிவு பெற்றவராகவும் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைநிலை வகுப்புகளுக்குரிய வாண்மைப்படுத்துநர் குறைந்தது 3 வருடம் குறிப்பிட்ட துறைசார்ந்து கற்பித்தல் அனுபவம் உடையவராகவும் பட்டப்படிப்புடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்றுள்ளவராகவும் அல்லது கல்வியியல் மாணிப் பட்டம் (B.Ed) பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.

அத்துடன் ஆலோசனை வழங்கலில் ஆர்வமுள்ளவராகவும் சமூகப் பொறுப்புணர்ந்து தியாகமனப்பான்மை கொண்டவராகவும் அவரிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளகப் பயிற்சியில் ஈடுபடுகின்ற பயிலுநர் வகுப்பறைக் கற்பித்தலுடன் தனது மாணவர், பாடசாலை, கற்பித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆய்வு ஒன்றினையும் மேற்கொண்டு பயிற்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் சமூகத்துடன் இணைப்பாக்கம் பெறும் வகையிலும் தொழிற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

இவை யாவற்றுக்கும் பாடசாலையினதும் சமூகத்தினதும் ஒத்துழைப்பு அவர்களுக்கவசியமாகும்.

தேசிய கல்வியியற் கல்லூரி பயிலுநர்களது சேவை சமுது எதிர்கால சமுதாயத்திற்கேயுரியது. எனவே இது தொடர்பான எமது சிந்தனையும் செயலும் எமது சமுதாய வளர்ச்சிக்குதவட்டும். ☆

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கான

# துப்பாக்கிக் கொள்வனவில் குளறுபடிகள் இடம்பெற்றன?

## கொடுப்பனவுக்குத் தடை உத்தரவு

கொழும்பு,ஜன.3

கடந்த தேர்தல் சமயத்தில் விமானப் படையூடாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குக கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் ரி-56 ரக துப்பாக்கிகள் அறுபதுக்கான கொடுப்பனவை மேற்படி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைமை நிறுத்திவைத்துள்ளது.

இணையத்தளச் செய்தி நிறுவனம் ஒன்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடும் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நிலையில், சீனத் துப்பாக்கித் தொழிற்சாலை நிர்வாகம் அனுப்பியிருந்த 4 கோடியே 50 லட்சம் ரூபா 'பில்'லுக்கான கொடுப்பனவை கூட்டுத்தாபனப் புதிய தலைவர் தஹம் விமலசேன நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குக்காக விமானப் படையினர் மூலமாக ரி-56 ரக துப்பாக்கிகள் வாங்கப்படுவதாக, இந்தக் கொள்வனவு நடந்த சமயத்தில் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த அனில் ஒபயசேகர தெரிவித்திருந்தார்.

ஆனால், கடந்த தேர்தலின் போது தேர்தல் மோசடிகளை நடத்தத் திட்டம் தீட்டியிருந்த சிலருக்காகவும் பாதாள உலகப் பிரமுகர்களுக்காகவுமே இந்தத் துப்பாக்கிகள் வாங்கப்பட்டதாகப் புதிய அரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு விசாரணை நடத்தவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (க-ஓ)

### பன்றிகளால் பணம் பாத்திகள் துவம்சம்!

மட்டுவில் பகுதியில் பன்றிகளின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதி காணிகளைப் பன்றிகள அகழ்ந்து வருகின்றன என்றும் பலரின் காணிகளில் போடப்பட்டிருந்த பனம் பாத்திகள் பன்றிகளால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்தவாரம் பன்றிக் கூட்டத்தைத் துரத்த முயன்ற மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த அரிய (குட்டி கிருஷ்ணபிள்ளை (வயது 53) என்பவர் பன்றியினால் தாக்கப்பட்டு காயமடைந்தார் என்றும் கூறப்பட்டது.

# எதிர்க்கட்சிகளுக்கும் சமவாய்ப்பு அரச ஊடகங்களில் வழங்கவேண்டும்

## அமைச்சர் இம்தியாஸ் வலியுறுத்து

கொழும்பு,ஜன.3

அரச ஊடகங்களில் அரசுக்கும எதிர்க்கட்சிகளுக்கும் சமவாய்ப்பு வழங்கவேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் கேட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

நம்பகத் தன்மையே இன்று அரச ஊடகங்கள் எதிர்நோக்கும் பெரும் சவாலாகும். எதிர்க்கட்சியினரின் வாய்ப்புக்கள் மறுக்கப்படக்கூடாது. இதனையே தமக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும வலியுறுத்தியுள்ளார்.

பலத்த போட்டியை அரச ஊடகங்கள் எப்போதும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

வெகுஜனத் தொடர்பு அமைச்சரின் செயலாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவருமான குமார் அபயசிங்க அங்கு உரையாற்றுகையில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் வளர்ச்சிக்கு அனுபவம்வாய்ந்த வானொலிக் கலைஞர்களின் சேவையைப் பெறமுற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். (க-ரி)

# கலைஞானியின் மறைவுக்கு வரதர் அணி அனுதாபம்

அமரர் கலைஞானி அ.செல்வரத்தினத்தின் சாதனை தனி மனிதனின் இமாலய சாதனை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தெரிவித்துள்ளது.

கலைஞானியின் மறைவை ஒட்டி வரதர் அணி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கலைஞானி அ.செல்வரத்தினம் அவர் நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்று அரும்பொருள்களைச் சேகரித்து வந்தவர் என்று எண்ணும்போது பெருவியப்பு ஏற்படுகிறது.

வரலாற்று உணர்வு மங்கி விட்ட சமூகத்தில் கலைஞானி போன்றவர்கள் எத்தகைய சவால்களை எதிர்நோக்கியிருப்பார்கள் என்பதனை நாம உணர்ந்து உணரமுடியும். அந்தவகையில் கலைஞானி அவர்களின் சாதனை தனி மனிதனின் இமாலய சாதனை என்று குறிப்பிடமுடியும்.

யுத்தமும் இடம்பெயர்வும் வாழ்க்கையோன சமூகத்தில் வரலாற்று அரும்பொருள்களைச் சேகரித்தல் என்பது மிகப் பெறுமானமுடைய விடயம்.

அவருடைய சேகரிப்புகள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு எமது வருங்கால சந்ததிகளுக்கு வழங்குவதே எமது உண்மையான அஞ்சலியாக இருக்கமுடியும் - என்றுள்ளது.(க-3)

### பனை வீழ்ந்து வீடு சேதம்

மழை வெள்ளத்தில் நின்ற பனைமரம் வீட்டின்மேல் வீழ்ந்ததால் அந்த வீடு பலத்த சேதமடைந்தது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு இரவு 7 மணியளவில் துன்னாலை வடக்கில் இடம்பெற்றது. வீட்டில் எவரும் இல்லாத தால் உயிரிழப்பு ஏற்படவில்லை. (க-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

சேலான் இன புறோயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். Prima இன வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகளுக்குப் பதிவு செய்தவர்களும், தேவைப்படுவோரும் 04.01.2002 மாலை பெற்றுக்கொள்ளலாம். வி.குணபாகன், இல.1014, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (பெரியபுலம் பாடசாலை முன்பாக). இல.4, கொழும்புத்துறை வீதி, (சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில்) பெற்றுக்கொள்ளலாம். T.P: 3353. (96574)

## விற்பனைக்கு

நொக்கியா காண்ட் செற் ரெலிபோன், 250 மைக்றோன் அடையாள அட்டைக் கவர், லெமினேற்றிங் மெசின் FUJI என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P: 2961. கொக்குவில். (96578)

நல்ல நிலையிலுள்ள 202 தொடா இலக்க ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.கலாநிதி, கோப்பாய் வீதி, கற்புலம் ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (96532)

## தவறிவிட்டது

ஆறுமுகம் தேவகியின் தேசிய அ.அ. (இல.777104560V), விசேட அ.அ. (இல.0906031913) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய மண்நிறக் கைப்பை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் உடுவில் டச்சு றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் DR.சோமசுந்தரம், "அமரகிரி", மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96577)

நவாலி கிழக்கு, மானிப்பாயைச் சேர்ந்த வி.கணேசலிங்கத்தின் தேசிய அ.அ. (இல.670122620V), விசேட அ.அ. (இல.0906015313) என்பன யாழ்ப்பாணத்துக்கும் ஆறுகால்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியிலோ அல்லது T.P: 2884 இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (96580)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. மாணவர்களே! உங்கள் பாடத் திட்டத்தில் உள்ள எல்லாச் சிறுகதைகளுக்கும் 'பொருளோ பொருள்' நாடகத்திற்கும் 'வீடற்றவன்' நாவலுக்கும் விளக்கமும் விமர்சனமும் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. ரூபா 125/=. (96530)

## ஆளுக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய்!

யாழ்ப்பாணம்,ஜன.3

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்நகரில் நேற்றைய தினம் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

ஸ்ரான்லி வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்தியில் உள்ள 'மாக்கெட்' எரிபொருள் நிலையத்தில் வைத்து இவ்விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஒருவருக்கு தலா 5 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. பொதுமக்கள் நீண்ட வரிசையிலிருந்து பெற்றுக்கொண்டனர். அத்துடன் பெற்றோல் விநியோகமும் இடம்பெற்றது. (க-173)

## சனி, ஞாயிறில் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

எதிர்வரும் சனி, ஞாயிறு இரு தினங்களும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றி விவரங்கள் யாழ்.கல்வி வலயங்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

தபால் திணைக்களத்தின் உப அஞ்சல் அதிபர்களையும், சிறு பணியாளர்களையும் ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தொகுதி 'பி' தரம் ஒன்று 'பி'க்குத் தெரிவுசெய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் -

கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் இரண்டாம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 5ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (க-10-8)

# வீடு சேதமடைந்தோருக்கு 25,000 ரூபா வழங்கும் திட்டம் நிறுத்தப்படமாட்டாது

கொழும்பு,ஜன.3

யாழ்.மாவட்டத்தில் யுத்த அனர்த்தங்களினால் வீடுகள் சேதமுற்றோர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு 25ஆயிரம் ரூபா வழங்கும் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவில் ஒரு பகுதியை ஏற்கனவே பெற்ற பயனாளிகளுக்கு எஞ்சிய தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

படிவத்தில் முத்திரையிட்டும் கொடுப்பனவை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள், நஷ்டஈட்டுக்குரிய ஆவணங்களைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தவர்கள் ஆகியோருக்கும் விரைவில் கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை -

பல நூற்றுக்கணக்கான பயனாளிகள் இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவை முழுமையாகப் பெறமுடியாமல் தமது வீடுகளை அரைகுறையாகத் திருத்திய நிலையில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ஜ-180)

## பாடசாலை நூலகங்களுக்கு சட்டநூல் இலவசம்

யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் நூல்நிலையங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு 'தேச வழமை' எனும் சட்டநூல் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலைப் பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் தம்முடன் தொடர்புகொண்டால் அனுப்பிவைக்கமுடியும் என்று பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த நூலாசிரியர் சட்டத்தரணி ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (க-173)

# சாவகச்சேரி வங்கிக்கிளை அச்சுவேலிக்கு மாற்றப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.3

தற்போது யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கிக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் அச்சுவேலி பிரதான வீதியில் உள்ள மாதா தேவாலயத்திற்கு அருகில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

வங்கியின் உயர்அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். இந்த வங்கி அதன் நிரந்தர இடமான சாவகச்சேரிக்கு மீண்டும் மாற்றப் பட்டாலும் கூட அச்சுவேலியில் ஒரு கருமபீடமாகத் தொடர்ந்து இயங்கும் எனவும் -

வங்கியின் சகல நடவடிக்கைகளும் அங்கு இடம்பெறும் என்றும்-

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஜ-180)

# இந்து கலாசார நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் ஒளிபரப்ப ஏற்பாடு

ரூபவாஹினியில் தினமும் ஒரு மணிநேரம் இந்து கலாசார நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப ஏற்பாடாகியுள்ளது. இதற்கான நிகழ்ச்சிகளைத் தயாரிக்க ரூபவாஹினியின் நிகழ்ச்சித் தயாரிப்புப் பிரிவு ஒன்று யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன இந்தப் பிரிவு இங்கு செயற்படவிருக்கின்றது.

எதிர்வரும் தைப்பொங்கல் அன்று விசேட நிகழ்ச்சிகள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இருந்து நேரடியாக ஒளிபரப்பவும் ஏற்பாடாகியுள்ளது. அன்று காலை 6.30 மணிமுதல் முற்பகல் 10 மணிவரை இந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும்.

மறுநாள் பட்டிப் பொங்கல் நிகழ்வுகள் இரு மாட்டுப் பண்ணைகளில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் பிரிவு, குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் சென்று நேரடியாக நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்புச் செய்யும். (க-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1928 - 04 - 09

மறைவு 2001 - 01 - 14

### திருமதி நாகலிங்கம் சரஸ்வதி

திதி: 03.01.2002

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்பின் இருப்பிடமே, பண்பின் உறைவிடமே!
நேசமுடன் எமை வளர்த்த அன்புத் தெய்வமே!
ஆசையுடன் உங்களைப் பேணிப் பாதுகாத்தோம்!
காலன் அவன் பொறுக்காமல் கவர்ந்தானோ?
ஓராண்டென்ன நூறாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் மாறாதம்மா!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பொன்னாலை, சுழிபுரம்.* (96575)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1st in Com., G.A.Q.

யாழ்., பேராதனைப் பல்கலைக்கழகங்களின்
**வெளிவாரிப் படிப்புகளுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன**

இக்கற்கை நெறிக்கு A/L இல் கலை, விஞ்ஞானம், கணிதம் இவற்றில் 3 பாடம் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தகுதியுடையவர்களாவர்.

இவற்றுக்கான விரிவுரைகளின் புதியபிரிவு ஆரம்பம்: **05.01-2002**

நிர்வாகி, S.அருள்நங்கை. (96582)

**புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்.**

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 21 - 11 - 1945

மறைவு 03 - 01 - 1994

### திருமதி அகத்தம்மா தியோகு

நெஞ்சிருக்கும் வரை
உன் நினைவிருக்கும் அம்மா!

பனை அபிவிருத்திச் சங்கம், *நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை.*

• உன் குடும்பம். (96583)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 11 - 07 - 1924

மறைவு 04 - 12 - 2001

### அமரர் சிதம்பரப்பிள்ளை கந்தையா

(கைதடி)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீரையா!*
*என்றும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இன்று (3.01.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு, உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

நிரந்தர முகவரி:- *கைதடி வடக்கு.*
தற்காலிக முகவரி:- *விளையாட்டு அரங்கு வீதி. கோப்பாய் தெற்கு.*

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
மனைவி,மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (96579)

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா சிவராசா

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட துரையப்பா சிவராசா நேற்று (02.01.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சந்தானலெட்சுமி, சுந்தரேசன் மற்றும் அகிலா, கிரிஜா, அனுசியா, பிரபாகரன், வனஜா, லோஜனா, மேகலா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கணேஸ்வரன், பகவத்சிங்கம், இராமலிங்கம், சிவஞானம், அருளமொழித்தேவர், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகந்தி, சுமதி, சுந்தரி, ஜெயந்தி, சாந்தி, நந்தி, ஜெயகாந்தன், தச்சனா, அஜந்தி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் சோனியா, கீர்த்தனா, ஜெசிகா, சிந்துஜன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு (சந்தி), திருநெல்வேலி.*

தகவல்: சி.மகேஸ்வரி (மனைவி), அகிலா,வனஜா (பிள்ளைகள்). (96576)

## வல்லிபுரம் வைத்திலிங்கம்

புங்கன்குளம், அரியாலையைச் சேர்ந்த வல்லிபுரம் வைத்திலிங்கம் நேற்று (02.01.2002) புதன்கிழமை மல்லாவியில் காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்), கமலினி (ஜேர்மனி), சுதாகரன் (லண்டன்), ரூபாகரன் (மல்லாவி), மாலினி (மல்லாவி), கிருபாகரன் (யாழ்.பல்கலைக் கழகம், முகாமைக் கற்கைகள் வணிகபீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோதா (ஜேர்மனி), சாந்தினி (லண்டன்), சந்திரசேகரன் (ஜேர்மனி), ரகுகாந்தன் (மல்லாவி), ராகினி (மல்லாவி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மிளா, பிரவீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.01.2002) புதன்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வை.கிருபாகரன் (மகன்).

நிரந்தர முகவரி: *62/2, கந்தர்மணியம் ஒழுங்கை, புங்கன்குளம், அரியாலை.* (96573)

தற்காலிக முகவரி: *அம்பத்தை, சிவன் அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி.*

## 15 வருடங்கள் அனுபவித்த கஷ்டங்கள் போதும்

# வலி.வடக்கு மக்களை மீளக் குடியமர்த்த

# புதிய அரசு விரைந்து செயற்படவேண்டும்

## கூட்டணிப் பிரமுகர் சிவமகாராசா கோரிக்கை

வலி.வடக்கு,ஜன.3

வலி.வடக்குப் பகுதியில் இருந்து கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் போதும். புதிய அரசு என்றாலும் அவர்களின் துயரைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிவமகாராசா மேற்கண்டவாறு இரு அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரிடமே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவதுடன் அவர்களைச் சொந்த இடங்களில் உடன் விவசாய முயற்சிகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

பலாலி முதல் காங்கேசன்துறை, மயிலிட்டி, வலித்தூண்டல், சேந்தாங்குளம், வடமராட்சி கடல் ஆகிய புகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி உடனடியாகப் பெற்றுத்தரவேண்டும்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கீழ் வறுமைக்கோடு என்று கணக்கிடப்படுவதற்குப் பதிலாக 3 ஆயிரம் ரூபாவுக்குக் கீழ் வறுமைக்கோடு என்று மதிப்பீடு செய்து ஏனையவர்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - எனவும் கோரியுள்ளார். (க-86)

## விவசாயிகள் தீர்மானம்

சண்டிலிப்பாய்,ஜன.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு கொழும்பு விலையில் உர வகைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் கொண்டு வந்தார். (ஐ-135)

## காய்ச்சலால் இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜன.3

நீண்டநாள்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கடந்த வாரம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கொக்குவில், பிறவுன் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை இலங்கேஸ்வரன் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-15)

## வடமராட்சிப் பகுதி வயல்களில் இலைமடிச்சுக்கட்டிப் புழுத் தாக்கம்!

### உடன் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.3

அண்மைக் காலமாகத் தொடர்ந்து பெய்த மழையினால் வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்வயல்களில் இலை மடிச்சுக்கட்டிப் புழுவின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மிகவும் வேகமாக இந்தப் புழுவின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால் விவசாயிகள் உடனடியாகப் பயிரினால் உள்ளெடுக்கக் கூடிய நாசினிகளை உபயோகித்து அதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காபோ பியூறான் மற்றும் குறுணல் மருந்துகளான பியூறடான், பசுடின், றீயென்ற், குளோறோ பைரிபொஸ், லைபசிற் போன்றவற்றை நீரில் கலந்து தெளித்தால் புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## குடத்தனையில் தையல் பயிற்சி

வடமராட்சி,ஜன.3

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இவ்வாண்டு குடத்தனை கிராமசேவையாளர் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கற்க விரும்பும் யுவதிகள் தமது விண்ணப்பங்களை 'உதவி அரச அதிபர், வடமராட்சி கிழக்கு, தும்பளை, பருத்தித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜன.3

கோப்பாய் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறுவுள்ளது. (க-10)

## மூளாய் வைத்தியசாலையை அண்டிய படையினரின் நிலைகளை அகற்றுக!

### அதிகாரிகளிடம் கோரிக்கை விட முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.3

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளாகத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள படையினரின் காவல் நிலைகளை அகற்ற வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கோருவது என்று வைத்தியசாலைச் சங்கம் முடிவு செய்துள்ளது.

வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் சங்கத்தலைவர் மா.இரத்தினசிங்கத்தின் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சமாதான ஒளிக்கீற்று தெரிகின்ற இந்தச் சூழ்நிலையில் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் அசௌகரியங்கள் எதுவுமின்றி வர வசதியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வைத்தியசாலைச் சங்கம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

இந்தக் கோரிக்கையை அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் விடுத்து நடவடிக்கை எடுப்பது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இக் கூட்டத்தில் கலந்துகொண்டு இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் (அபிவிருத்தி) க.சண்முகநாதன், முன்னாள் பிரதேச செயலர் சி.சந்திரராசா உட்படப் பலர் அங்கு உரையாற்றினர். (க-3)




யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஓய்வுபெற்ற வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. ஓய்வுபெற்ற வங்கியாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கை வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற என்.கனகரத்தினம் (வயது 78) என்பவர் இந்நிகழ்வில் பரிசினைப் பெற்றுக்கொண்டபின்னர் நன்றி தெரிவித்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத் தலைவர் து.ரகு அருகில் காணப்படுகிறார்.

பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் சீ.நடராசலிங்கம் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)

## மரவேலை பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்பிரதான தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் இயங்கிவரும் அரசினர் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மரவேலைப் பயிற்சிநெறி ஒருவருடகாலக் கற்கைநெறியாக நடைபெற்றுவருகிறது. மரவேலையில் ஆர்வமுள்ள மாணவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை மேற்படி பாடசாலையில் ஒப்படைக்குமாறும் -

பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு பயிற்சிப் படியும் வழங்கப்படவுள்ளதுடன் நேர்முகப் பரீட்சை மூலமே மாணவர் தெரிவு இடம்பெறும் என்றும் தொழிற்றுறை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கக் கோரிக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.3

வடமராட்சியில் மழை காரணமாக வீடு சேதமடைந்த மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் வடமராட்சி அமைப்பாளர் எஸ்.அரவிந்தன் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சரைக் கோரியுள்ளார்.

அமைச்சருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தென்-மேற்கு, வடமராட்சி தெற்கு பிரதேச செயலக பிரிவுகளில் வாழும் மக்கள் மழை வெள்ளம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மிக வறிய நிலையில் உள்ள அந்த மக்களின் குடிசைகள் பெருமளவு சேதத்துக்குள்ளாகியுள்ளன. அவற்றைத் திருத்தியமைக்க முடியாத நிலையில் அந்த மக்கள் உள்ளனர்.

அவர்கள் உறவினர்கள் வீடுகளிலும், மரங்களுக்குக் கீழும் தங்கித் தமது உணவைத் தயாரித்து வாழ்க்கையை நடத்துகின்றனர். எனவே அவர்கள் தமது வீடுகளைப் புனரமைத்து மீளத் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க உடன் உதவி வழங்குமாறு கோருகின்றேன் - என்றுள்ளது.

அக்கடிதத்தின் பிரதி யாழ்.அரச அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ஐ-3)

## சஞ்சீவி வாசகர் கருத்து

### சஞ்சீவியே! முகம் காட்டு!!

"தை பிறந்தால் வழிபிறக்கும்" - என்பார்கள். அந்த வகையில் திருவெம்பாவை ஆருத்திரா தரிசன நன்னாளில் 'சஞ்சீவி' வார இதழ் புதுப் பொலிவுடன் வெளிவரவுள்ளது என்ற நல்லசெய்தியும் வந்திருக்கின்றது. இது வாசக அன்பு நெஞ்சங்களுக்கும் மிகுந்த மனமகிழ்ச்சியைத் தரும் நற்செய்தி. கடந்த 20 மாதங்களாகச் சஞ்சீவி இல்லாது தவித்தோம்.....

கருத்துக்கலசம், உலக உலா, பாடம் பயில்வோம், நூல்வரிசை, தாயகம், சிறுகதை, கவிதைக் கதம்பம், சொற்சிலம்பம், விளையாட்டு விமர்சனம், சிறுவர் - மாதர் - ஆடவர் அம்சங்கள்... இத்தியாதி பல்சுவை, ஜனரஞ்சக பகுதிகளை மீண்டும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

எழுதத் துடிக்கும் இளைய சமுதாயத்துக்குத் தொடர்ந்தும் ஆக்கமும், ஊக்கமும் அளிப்பீர்கள் என நம்புகிறேன்.

இனி எக்காலமும் தங்குதடையின்றி சஞ்சீவி வெளிவரவேண்டும் என நல்வாழ்த்துக் கூறுகிறேன்.

வட்டுக்கோட்டை. கே.இராஜகோபால்

### வர்ண அச்சில் வருவாயா சஞ்சீவி?

சஞ்சீவி மீண்டும் வலம் வரப்போகின்றது என்ற செய்தியைப் பார்த்ததும் உள்ளம் பூரிப்படைந்தது!

உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்து கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் வெளி உலகுக்குக் கொண்டுவந்த பெரும் பொக்கிஷம் சஞ்சீவி. அதனை வரவேற்க வாசகர்கள் காத்திருக்கின்றனர்.

வித்துவான் பதில், மௌனமொழி என்ற இரு அம்சங்களும் தவறவிடப்படக்கூடாது. அதனுடன் சினிமாப் பகுதியையும் இணைத்தால் நன்றாக இருக்கும். வர்ணத்தில் அச்சிட்டால் மேலும் வரவேற்பு இருக்கும்.

சஞ்சீவி மீண்டும் சிரஞ்சீவியாக புத்தாண்டில் புதுப் பொலிவுடன் வர எம் வாழ்த்துக்கள்.

சண்டியூர். எஸ்.கவிக்கதிர்.

### கவிதை முற்றம் தொடரட்டும்!

தமிழ் மக்களது ஏகோபித்த உணர்வுகளை ஒருங்கு சேர்த்து வெளிப்படுத்தி யாழ்.மக்களின் அடி நாதமாய் விளங்கிவரும் 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைகளின் அலுவலகம் 2000ஆம் ஆண்டு மே மாதம் அரச இராணுவ இயந்திரத்தின் 'தணிக்கை' எனும் இரும்புக் கையால் சீல் வைத்து மூடப்பட்டபோது உலகத் தமிழினத்தின் குரல்வளையே நசுக்கப்பட்டது.

நாற்பத்தைந்து நாள்களின் பின் 'உதயன்' எம் கைகளில் தவழ்ந்த போதும் 'சஞ்சீவி' எனும் சிரஞ்சீவியைக் காண இயலவில்லை. எனினும், ஒன்றரை வருடங்களின் பின் 'சஞ்சீவி' நம் கைகளில் தவழப் போகின்றான் என்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி.

சஞ்சீவியில் முன்பு போலவே 'அங்கிகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்', 'என் பிரிய பூமிக்காக', 'கவிதை முற்றம்', 'மௌனமொழி' ஆகிய பகுதிகளை உள்ளடக்கினால் அதற்குப் பலத்த வரவேற்பு கிட்டும். மேற்படி விடயங்கள் மேலும் மெருகூட்டப்படுவதன் மூலம் அறிவுள்ள இளைய சமுதாயம் உதயனின் பின்னால் அணிதிரளும் என்பதில் ஐயமில்லை.

கோப்பாய் தெற்கு. உ.பிரேமகரந்த்.

### தகவல் தொழில் நுட்பம் பற்றி பிரசுரிக்குக!

இன்றைய உலகம் 21ஆம் நூற்றாண்டில் சாதிக்கப் போவது என்ன என்ற வினாவிற்கு விடை காண்பதில் தகவல் தொழில் நுட்பத்தின் (IT) பங்கு முக்கிய இடம் வகிக்கின்றது. பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சி தகவல் தொழில்நுட்பத்தில்தான் தங்கியுள்ளது என்று கூறுவதில் மிகையில்லை. அந்தளவுக்கு இவற்றின் பயன்பாடு அதிகமெனலாம்.

விருத்தி அடைந்த நாடுகளில் புதிய புதிய தகவல் முறைகள் நாளுக்கு நாள் அறிமுகமாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் தகவல் தொழில்நுட்ப முறைகளும், அதுபற்றிய அறிவும் மந்த நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குப் பல காரணங்கள்.

இருந்த போதிலும் எமது இளம் சமுதாயம் எதிர்நீச்சல் போட்டு முன்னேற வேண்டுமாயின் இவை பற்றிய அறிவையும், திறனையும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

எனவே புதுப்பொலிவுடன் வெளிவரவிருக்கும் சஞ்சீவியில் பிரத்தியேகமாக இடம் ஒதுக்கி, தகவல் தொழில்நுட்பம் பற்றிய பல்வேறு விடயங்களையும், புதிய தகவல்களையும் தொடர்ச்சியாகப் பிரசுரிக்க வேண்டுமென வேண்டுகின்றேன். இத்தகைய விடயங்களை இளம் வயதினர் முதல் முதியோர்வரை வரவேற்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மட்டுவில் வடக்கு. சா.இரஞ்சினி.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

03-01-2002

HAPPY BIRTHDAY



### செல்வன் பிரதீபன் நிகாஷ்

கலட்டியைச் சேர்ந்த பிரதீபன் - சாந்தரூபி தம்பதியினரின்

**செல்வப்புதல்வன் நிகாஷ்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (03-01-2002) வியாழக்கிழமை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசையக்கா (திபி) மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார் (இந்தியா), தாத்தா, அம்மம்மா, சித்தி (கலட்டி), தீபாமாமி குடும்பம், பெரியமாமா (ஜேர்மனி), கஜன் சித்தப்பா, சின்னமாமா, ஆசைமாமா, குட்டிமாமா (பிரான்ஸ்), சீனிமாமா (லண்டன்) ஆகியோர் காமாக்ஷியம்பாள் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*16, கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/19080)

வாழ்த்துபவர்களில்
**வே.வடிவேலு (தாத்தா).**

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



திருநெல்வேலியைச் சேர்ந்த
**கனகராஜா - உதயந்தி தம்பதியினரின்**

### செல்வப்புதல்வி சாம்பவி

அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (03-01-2002) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

சாம்பவியை அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தி, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பாட்டாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் சிறப்புற வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

*Y.M.H.A. அருகில், திருநெல்வேலி.* - **குடும்பத்தினர்.** (96600)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யாழ்.பல்கலைக்கழக**
**நடனத்துறை விரிவுரையாளர்**

### திருமதி கிருஷாந்தி ரவீந்திரா

அவர்கள் முதுதத்துவமாணி (பரதநாட்டியம்) பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இலங்கைப் பல்கலைக்கழக மரபில் முதன்முதலாக பரத நாட்டியத் துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்ற அவருக்கு எமது உளம் மகிழ்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் மேலும் இக்கலையில் சிறப்புற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

**2ஆம், 3ஆம் வருட சித்திரவடிவமைப்பு,**
**நடனத்துறை மாணவர்கள்,**
**இராமநாதன் நுண்கலைத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.** (96596)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்(வ-து)சுன்னாகம்

### வெற்றுச்சாக்குகள் விற்பனை

மேற்படி சங்கத்தில் 6000இற்கும் மேற்பட்ட வெற்றுச் சாக்குகள், வெற்றுப் பைகள் என்பன கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. இதற்கான கேள்விப் பத்திரத்தை மீளளிப்புப் பணமாக ரூ.500/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வெற்றுச் சாக்குகளையும், வெற்றுப் பைகளையும் சங்க வேலை நாள்களில் பார்வையிடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 10.01.2002 நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம், - **பொது முகாமையாளர்.**
சுன்னாகம்.
01.01.2002 (C/19076)

## அறிவித்தல்

**செல்வி ஜீ.ரி.வடிவேலு** ஞாபகார்த்தப் பரிசிலுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக்குரிய சீட்டுப் புத்தகங்களைப் பெற்றோர் அவற்றை (04.01.2002) வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பொருளாளரிடம் அல்லது கல்லூரியில் யோ.பற்குணராஜாவிடம் தவறாமல் கையளிக்கவும்.

வேம்படி மகளிர் கல்லூரி, தலைவர்,
யாழ்ப்பாணம். (C/19083) **பழைய மாணவிகள் சங்கம்.**

## ஜி.சீ.ஈ. உயர்தரம்; மாணவர் நிலை விவரம் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜன.3

2001ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலான யாழ். மாவட்ட மாணவர்களின் மாவட்ட மற்றும் தேசிய நிலை(Rank) பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள இந்த விவரங்களை ஏனைய கல்வி வலய அதிகாரிகளையும் யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்களையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வலயக கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.(ம-10)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி,ஜன.3

துன்னாலை வடக்கு மிந்திரன் அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் நடைபெறும்.

மீசாலையூர் 'சிவத்தமிழ் மணி' ஆறுமா துரைராஜா குழுவினர் திருவாசக முற்றோதலில் ஈடுபடுவர்.(ம-117)

## ஒன்றுகூடலும் பிரிவுபசார விழாவும்

தென்மராட்சி,ஜன.3

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும், பிரிவுபசார விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கத்தலைவர் செ.முருகையா தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும்.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இளைப்பாறிய மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள சங்க அங்கத்தவர்களுக்கு பிரிவுபசார விழாவும் நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார்.(ம-117)

## இரண்டாம் தொகுதி விடைத்தாள்கள் கொழும்புக்கு

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாவது தொகுதி விடைத்தாள்கள் நாளை வெள்ளிக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் மிகுதி வினாத்தாள்கள், காகிதாதிகள் என்பனவும் அனுப்பி வைக்கப்படவுள்ளன. முதற்றொகுதி விடைத்தாள்கள் கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

(ம-10-8-51)

## தையற் பயிற்சிநெறி

யாழ்.பிரதேச செயலக்தினால் நடத்தப்படும் தையற் பயிற்சிநெறிக்கு பயிற்சியாளர்களை ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்துக்குப் பின்புறமாகவுள்ள மாதர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜன.3

புதுவருடத்தை உறவினருடன் கொண்டாடிவிட்டு வீடு திரும்பிய குடும்பஸ்தர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் பருத்தித்துறை பொது நூல் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினம் ரஞ்சன் (வயது30) என்பவரே படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-117)

## வீதி மீண்டும் போக்குவரத்துக்கு

தென்மராட்சி,ஜன.3

கைதடி-கோப்பாய் வீதி மீண்டும் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால் கோப்பாய் பாலத்தடியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பாதை வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றதையடுத்து இவ் வீதியூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது புதிய தற்காலிக பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து வீதி போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேவேளை -

இசேதமடைந்துள்ள பாலத்தை திருத்தி அமைப்பதற்கான பணியும் நடைபெற்றுவருகிறது. (ம-117)

உ
சிவமயம்

**யாழ்ப்பாண பல்கலைக்கழக**
**இராமநாதன் நுண்கலைக்கழகமும் யாழ்ப்பாணம்**
**இந்து சமயப் பேரவையும் இணைந்து நடத்தும்**
**புகழ்பூத்த தமிழகக் கலைஞர்களின்**

## மாபெரும் இசை விருந்தும் பாராட்டும்

*இடம்* : யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாகம்
*காலம்* : இன்று (03.01.2002) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணி
*தலைவர்* : சாகித்திய இசைப்பேரரசு
**திரு.ந.வி.மு.நவரத்தினம்** M.Music, M.Phil.
(தலைவர், இசைத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)
நாதஸ்வரம் : நாதஸ்வர இசைமேதைகள்
**தமிழ்நாடு மாம்பலம் M.K.S.சிவா சகோதரர்கள்**
தவில் : தவிலிசைச் சக்கரவர்த்தி
**திருப்பூங்கூர் T.G.முத்துக்குமாரசாமி**
**தவிலிசை மேதை N.R.இராமநாதன்**

**இசை ஆர்வலர்கள் அனைவரையும்**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

- இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

இராமநாதன் நுண்கலைக் கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
சுன்னாகம். (C/19078)

## கண்ணீர் அஞ்சலி

முகாமைத்துவத்துறை முதலாம் வருட மாணவன்
செல்வன் கிருபாகரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### வல்லிபுரம் வைத்திலிங்கம்

அவர்கள் 02.01.2002 இல் மல்லாவியில் காலமானார். அவரது பிரிவால் நாம் மிகவும் துயரமடைகின்றோம். அவரது மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவத்துறை முதலாம் வருட மாணவர்கள்,
(96594) யாழ்.பல்கலைக்கழகம்.

## இதய அஞ்சலிகள்

யா/மானிப்பாய் மெமோறியல்
அன்னையின் முன்னாள் அதிபரும்
கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும்
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வளர்ச்சிக்காக
தன் இறுதி மூச்சுவரை உழைத்தவருமாகிய

### வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

அவர்கள் 01.01.2002இல் கனடாவில் அமரத்துவம் அடைந்தார். இச்செய்தி கேட்டு நாம் ஆறாத்துயரடைகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுடன் நாமும் துயர் பகிர்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில
(96601) பாடசாலை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (02.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மனோரஞ்சினி, சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜசேகரம் (அதிபர், நீர்வேலி C.C.T.M.S.), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், கபிலன், சகிலன், கோகுலன், கிருத்திகா, ஜனோஜன், சங்கவி, ராகவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கிழுவானை வீதி,* இ.இராஜசேகரம்
*கோப்பாய் மத்தி.* (96595) (மருமகன்).

### சின்னத்தம்பி தனபாலசிங்கம்

**(பெரியாம்பி) (ஞானவைரவர் லொறி உரிமையாளர் 42-1032)**

சங்கானை வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூர் குறுக்கு வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னத்தம்பி தனபாலசிங்கம் 29.12.2001 சனிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*61/2, நல்லூர் குறுக்கு வீதி* மனைவி: யோகேஸ்வரி (ராஜி)
*(மாநகரசபை முன்வீதி),* மைத்துனர்: சி.செல்வராஜா
*யாழ்ப்பாணம்.* (96603) (மாயவன் லொறி)

# யாழ். மாநகர சபையின் அறிவித்தல்

1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும், அதன் திருத்தங்கள் உட்படவும்.

யாழ். மாநகரசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் கட்டுதல், கட்டடங்களில் மாற்றம் செய்தல் போன்ற சகல அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதும் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே மாநகர சபையிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து யாழ். மாநகர சபையின் முன் அங்கீகாரம் பெற்ற பின்பே, வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருவதுடன், முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இந்த அறிவித்தல் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள், கோயில்கள் யாவற்றுக்கும் பொருந்தும்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

01.01.2002 (C/19086)

# யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

பாண் விற்பனை தொடர்பான

## கலந்துரையாடல்

பாண் விற்பனை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு சகல அங்கத்தவர்களும் 04.01.2002 வெள்ளிக்கிழமை 11.00 மணிக்கு தலைமைச் சங்கத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

317,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C/19087)

நிர்வாகம்,
யா.மா.பே.உ.சங்கம்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
திரு.ச.லலீசன் அவர்களின் அன்புத் தந்தையார்

## இளையதம்பி சந்திரமௌலீசன்

அவர்கள் 04.12.2001 அன்று இறைபதமெய்தியமையையிட்டு, 31 ஆம் நாளாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(96605)

# ஏலவிற்பனை

இவ்வைத்தியசாலையில் உபயோகிக்க முடியாததாகத் தீர்மானிக்கப்பட்ட எக்ஸ் கதிர் இயந்திரம் ஸ்ரலஸ் கோப் (Sireskope 5/45) 5/45ஐ 31.01.2002 அன்று காலை 10.00 மணிக்கு பொது ஏலத்தில் விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரும்புவோர் அன்றைய தினம் பணம் செலுத்தி ஏலத்தில் பெற்றுக்கொள்ளலாம். பார்வையிட விரும்புவோர் எதிர்வரும் 28,29,30 ஆகிய திகதிகளில் வைத்தியசாலையில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C/19088)

# காய்ச்சலால் மற்றுமொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.3

காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றும் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கு, இருபாலைச் சந்தியைச் சேர்ந்த கந்தையா சின்னம்மா (வயது 57) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த இரு வாரங்களுக்குள் யாழ்.வைத்தியசாலையில் மட்டும் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட, 6 மாதக் குழந்தை உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட பலர் தினந்தோறும் வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவுகளிலும், வார்ட்டுகளிலும் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-6-9)

# மாணவியைக் காணோம்

தென்மராட்சி,ஜன.3

வரணியில் இருந்து நெல்லியடிக்கு ரியூசனுக்காகக் கடந்த திங்கட்கிழமை வந்த உயர்தர வகுப்பு மாணவியொருவர் நேற்றுமுன்தினம் வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இலங்கை.
வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

### பட்டச் சான்றிதழ் வழங்கல்

30.11.2001 நடைபெறவிருந்த பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் 28.01.2002 திங்கட்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பதிவாளர்
02.01.2002 (C/19085)

## ராஜா யாழ்ப்பாணம்

ஷியாம், சிம்ரன், ஜோதிகா
நடித்த

### 12 B

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00

(C/20092)

## நிரஞ்சனாஸ் சங்கானை

அமரர் சிவாஜி கணேசனின்
ஞாபகார்த்தமாகத் திரையிடப்பட்டுள்ளது.

சிவாஜி, விஜய், சிம்ரன் நடித்த

### ஒன்ஸ்மோர்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

நாளை முதல்

### ஆளவந்தான்

(C/20099)

## லஷ்சுமி இணுவில்

அஜீத், மம்முட்டி,
அப்பாஸ், தபு, இஸ்வர்யா

### கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்

(ரீல்ஸ்)
தினசரி 10.30, 2.30

(96607)

## RECORD BOOK

பாடசாலைகளுக்கான
பாடப் பதிவேடுகள்
விற்பனையாகின்றன.
பிரதி ஒன்றின் விலை.
ரூபா:- 100.00

### பாரதி பதிப்பகம்

430,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 3081

(C/19084)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள சக உத்தியோகத்தர்
திரு.ச.நசேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## வயிரவன் சரவணமுத்து

அவர்கள் 02.01.2002இல் இயற்கை எய்தியதையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துன்பதுயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
பணிப்பாளரும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினரும்,
யாழ்ப்பாணம்.
யாழ். மாவட்ட கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்களும்.

(C/19079)

# மரண அறிவித்தல்கள்

## S.R.கதிரவேற்பிள்ளை

(பெரிய கடுக்கன் - லொறி உரிமையாளர்)

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மாத்தனை முருகன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட S.R.கதிரவேற்பிள்ளை கனடாவில் 01.01.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா இராசையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இராசமலரின் அன்புக் கணவரும் தங்கமணி, பஞ்சாட்சரம், பாலசுந்தரம், சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன் (ஹொலண்ட்), அனுஷியா (கனடா), விஜேந்திரன் (பிரான்ஸ்), சித்திரா (கனடா), குலேந்திரன் (கனடா), தனஜா (கனடா), இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*109, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்,*
*தொலை பேசி:- 3130*

(96609)

தகவல
அ.முத்துலிங்கம்
(மைத்துனர்)

## வைரவன் சரவணமுத்து

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் சரவணமுத்து நேற்று (02.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும், நாகேந்தினி, நசேந்தினி (யாழ்.போதனா வைத்தியசாலை), நசேந்திரன் (கமநல சேவை நிலையம், யாழ்ப்பாணம்), துஸ்யந்தன் (கொழும்பு), தேவநந்தினி, சுகிர்தராஜ், மேகலாநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாதம், தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜோன் பிலிப்பின் (யாழ்.போதனா வைத்தியசாலை) மாமனாரும் தர்சனின் பாசமிகு பேரனும் வேலன் பிள்ளையான் - காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியினரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.2.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை நாராயன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.நசேந்திரன் (மகன்)
கமநல சேவை நிலையம், யாழ்ப்பாணம்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

வே.பி.சண்முகநாதன் (மைத்துனர் -
கமநல சேவை - வேலணை).

(96604)

## இராசரத்தினம் குகானந்தன்

அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் குகானந்தன் 01.01.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இராசரத்தினம் - காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் மகாராணியின் (தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் துஷாவின் அன்புத் தந்தையும் கணேசானந்தன் (பொறியியலாளர், ஹொங்கொங்), நகுலாம்பிகை (ஜேர்மனி), ஞானாம்பிகை (பிரான்ஸ்), நித்தியானந்தன் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராமகிருஷ்ணன் (ஜேர்மனி), சிறீதரன் (பிரான்ஸ்), நீற்றா (ஹொங்கொங்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 06.01.2002 ஞாயிற்றுக்கிழமை இல் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*
*தற்காலிக முகவரி:*
*129, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
இ.இராசரத்தினம் (தந்தை)
இளைப்பாறிய
கிராமசேவையாளர்.

(96611)

## ஆறுமுகம் மகாதேவன்

(இரசாயனவியல் ஆசிரியர்)

கரும்பசிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் மகாதேவன் (முன்னாள் இரசாயனவியல் ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) கொழும்பில் நேற்று 02.01.2002 மாலை 7.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

கொழும்பில் நடைபெறும் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*49, குவாரி வீதி,*
*தெஹிவளை.*
*தொ.பே.இல. 075 532678*

(C/19091)

தகவல்:
மங்களராணி மகாதேவன்
(மனைவி)

# நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் விநியோகம் :- 07.01.2002 நண்பகல் 12.00மணிவரை
கேள்வி ஏற்கப்படும் திகதி :- 09.01.2002 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 09.01.2002 பி.ப. 2.00 மணி.

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

### அறிவித்தல் I

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரி. தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 350/- | 3,000/- | 130,600/- |
| 02. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3,000/- | 36,000/- |

### அறிவித்தல் II

| | | | |
|---|---|---|---|
| கடை இல. 38 | 500/- | 10,000/- | 324,000/- |
| கடை இல. 39 | 500/- | 10,000/- | 324,000/- |

க.மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
01-01-2002.

(C/19089)

## நோர்வேயின் ஏற்பாட்டாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே பிரதமருக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பியதை அடுத்து, நோர்வே அரசு சமாதான முயற்சிகள் தொடர்பாக துரித நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது.

அதன் முதற்கட்டமாகவே புலிகளின் அரசியல் ஆலோசகரை நோர்வே சமாதானக் குழு நாளை லண்டனில் சந்திக்கிறது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை குறித்தும், சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் பற்றியும் நோர்வே அரச பிரதிநிதிகள் பாலசிங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவர்.

விடுதலைப் புலிகளின் ஆலோசகருடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் இந்தத் தூதுக் குழுவினர் அடுத்தவாரம் கொழும்பு சென்று அரச பிரதிநிதிகளைச் சத்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக வன்னி மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுப்பது அரசின் கடமை.

அது நல்லெண்ணத்தை வளர்க்கும். விரைவில் சமாதானம் ஏற்படவும் வழிவகுக்கும்.

யுத்தநிறுத்தம் வந்துவிட்டது என்று சந்தோசமாக இருக்கின்ற மக்கள் அந்த யுத்தநிறுத்தம் ஒரு மாதம் வரைதானோ என்றும் அங்கலாய்க்கின்றனர்.

எனவே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, அவர்களுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கும் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்குரிய அழுத்தங்களையும் நாங்கள் கொடுப்போம் - என்றார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளே யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மேல்நீதிமன்றங்களுக்கு மாற்றப்படவுள்ளன.

வழக்குகள் மாற்றப்பட்டதும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களும் யாழ். மற்றும் வவுனியா சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளனர். (ம)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானமும் ஏற்படும் வகையில் தொடர்ந்தும் அனுசரணையாளராகப் பணி புரிந்து முரண்பட்டு நிற்கும் இரு சாராருக்கும் உதவுமாறு வேண்டிக்கொள்கின்றேன்." - இவ்வாறு தலைவர் பிரபாகரனது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## டீஸல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதை உறுதிப்படுத்துவதற்கான இராணுவ ரீதியான ஒழுங்குமுறைகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இன்னும் இரு வாரங்களில் அந்த ஒழுங்குமுறைகள் நடைமுறைக்கு வரும் என்றும் கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் கையாள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு நாட்டு மக்கள் தமது ஆணையை வழங்கியுள்ளனர்.

நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் தனது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்ய அரசு கடமைப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் - புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள - மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பத்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருள்கள் மீதான தடையையும் நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (ம)

# பதுங்கி வைத்திருந்த ஆயுதங்கள் அத்துனுகிரியவில் மீட்கப்பட்டன

## ரணிலைக் கொல்வதற்கு கொண்டுவரப்பட்டவையாம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கொலை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்கள் சிலவற்றை இராணுவப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துனுகிரியவில் உள்ள 'மிலேனியம் சிற்றி' கட்டத்திலிருந்து நேற்று இந்த ஆயுதங்கள் கைப்பற்றபபட்டன. அவை நேற்று மாலை நாரஹேன்பிட்டி பொலீஸ் தலைமையகத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இரகசியத் தகவல் ஒன்றினை அடுத்து இராணுவப் பொலீஸ் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் உடுகம் பொல தலைமையில் சென்ற குழுவே மேற்படி ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளது. பிரதமர் ரணிலைக் கொலை செயவதற்காகவே இந்த ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாக தகவல் கொடுத்தோர் தெரிவித்ததாகவும் -

4 இயந்திரத்துப்பாக்கிகளும் 2 கிரனேட்டுக்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் - இராணுவப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)


JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
DIPLOMA IN AGRICULTURE
விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி

ஒரு வருட கால இலவச விவசாய டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ளவிரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ளவிரும்பும் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்த 17 - 25 வயதுக்கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

போதிக்கப்படும் பாடங்கள்

விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப் பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்.

பயிற்சிநெறி காலத்தில்....

இலவச கணனிப் பயிற்சியும், உதவுதொகையாக நாள் ஒன்றுக்கு 40 ரூபாவும் வழங்கப்படுவதுடன், பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.


இப்பயிற்சிநெறியில் சேரவிரும்புவோர் 09-01-2002 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

*மேலதிக விவரங்களுக்கு:-*

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம் - சுன்னாகம். (96585)



புலமைப் பரிசில் திட்டம்-2002




FREE SEMINAR FREE SEMINAR FREE SE

எமது ஒரு வார இலவச கருத்தரங்கின் முடிவில் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இப்புலமைப்பரிசில் திட்டத்திற்குள் இலகுவாக நீங்கள் நுழையலாம்.

இத்திட்டத்தின் மூலம் நீங்கள் தெரிவு செய்யக்கூடிய பாட நெறிகள்

Diploma in MS Office
Diploma in Desktop Publishing
Duration 3 Months
FREE Seminar From 07-01-2002
Diploma in Video Mixing
Diploma in Web Designing
& Certificates Courses
Closing Date 06-01-2002

பரீட்சை முடிவை எதிர்பார்த்திருப்போருக்கு ஏற்றதான பாடத்திட்டத்தைக் கொண்டது

உங்கள் சுயவிபரத்தை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் இலகுவாக இப்புலமைப் பரிசிலிற்கு நீங்கள் விண்ணப்பம் செய்யலாம்.

மேலதிக விபரங்களிற்கு
Director

STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P:2674 e-mail: stpedu@sltnet.lk



BARATHY
சித்தன்கேணி
A/L 2004
புதிய பிரிவு ஆரம்பம்:
05.01.2002 (சனி)

| | |
|---|---|
| பொருளியல் | - சண் |
| கணக்கீடு | - முகுந்தன் |
| வணிகக்கல்வி | - பசில் |
| அளவையியல் | - R.P.சர்மா |
| தமிழ் | - பாலா |
| இந்துநாகரிகம் | - சுரேஸ் |
| இந்துசமயம் | - தரன் |
| புவியியல் | - குமரன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன் |
| நாட.அரங்கியல் | - சுதன் |
| ஆங்கிலம் | - விஜயபாஸ்கர் |

(96564)



இணையப் பக்க வடிவமைப்பு, இணைய சேவை வழங்குநர்கள்
www.sooriyan.com
(Internet Solution Providers)
இத் நூற்றாண்டின் இணையப் புரட்சியில் உங்களை இணைக்க – தமிழ் இணைய முன்னோடிகளான எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
077 882893, 077 780304
இல.14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு.
(தமிழ்ச் சங்கத்திற்கு முன்பாக) (C-20081)



BEACON
யாழ்நகர்
வெளிவாரிப்பட்டப்படிப்புகள்
யாழ்ப்பாணம்,பெரதேனியா
G.A.Q 2002/2003
எமது வழமையான ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகிறது
காலம் :-05.01.2002 (சனி)
நேரம் :-9.00 a.m. (பழைய நேரம்) (96591)



A/L 2004
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி-12
சனி - 8மணி
DMI
யாழ்நகர்
(C/19073)



நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
A/L 2004 (96608)

| கணிதப்பிரிவு | கலை, வர்த்தகம் |
|---|---|
| ஆரம்பம்: 04-01-2002 | ஆரம்பம்: 05-01-2002 |
| வெள்ளி 3.00 மணி | சனி 9.00 மணி |
| (வழமையான ஆசிரியர் குழு) | (வழமையான ஆசிரியர் குழு) |


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 - 11 - 1934



மறைவு 04 - 12 - 2001

### அமரர் இ.சந்திரமௌலீசன்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நகரசபை - சாவகச்சேரி)
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக் கூட்டுவழிபாடும் சபிண்டீகரணக் கிரியைகளும் நாளைமறுதினம் (05-01-2002) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு:-* இடம்பெயர்வு காரணமாக சில அழைப்புகளை நேரில் கையளிக்கமுடியவில்லை. அனைவரும் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர் சார்பில்
திருமதி ந.சந்திரமௌலீசன்,
திரு.திருமதி லலீசன் *(ஆசிரியர்கள்)*

வதிவிடமுகவரி:
*அத்தியார் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கை,*
*அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி.* (C/19053)


IBMS
இன் Module Examination

MsWord, MsExcel, MsAccess,Java ஆகிய கற்கைநெறிகளின் பரீட்சை 5ம்,6ம் திகதிகளில் நடைபெற இருப்பதால் நீங்கள் கல்விகற்ற காரியாலயங்களில் உடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்(மீள்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும் அனுமதி அட்டைகளை உடன் பெற்றுக்கொள்ளவும்)

Director
(*Ad*)


## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சிவசுப்பிரமணியம்

திருநெல்வேலி வடக்கு, பலாலி வீதியைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் சிவசுப்பிரமணியம் (03.01.2002) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருணகிரிநாதன் (ஓய்வுபெற்ற M.S.O., யாழ்.தபாலகம்), பொன்னம்பலநாதன் (ப.நோ.கூ.சங்கம்), செந்தில்நாயகம் (சிறுப்பிட்டி), வடிவானந்தம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், திருநெல்வேலி கால்நடை அபிவிருத்தித் திணைக்களம்), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் திருமதி பாக்கியலீலா, திருமதி சர்வேஸ்வரி நரேந்திரன் (ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), திருமதி அருணேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரதேவி, பரமேஸ்வரி, ராஜேஸ்வரி, தவஞானசரஸ்வதி, நரேந்திரன் (பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், விலங்கியல் துறை-யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதா, கிரிதரா (யாழ்.பல்கலைக்கழகம்), டிலானி, கார்த்திகா, சுகந்தா, தேசிகன், கோகுலதாசன், கஜேந்திரன், மகிழ்தினி, தனேஸ், அனுஜன், சரணியா, காருண்யா, துஷ்யந்தன், கவிகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மெதுஷன், யதுஷிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு.* (96616)

தகவல்:
S.நரேந்திரன் (மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.